www.padippakam.com

விலை 3-00 ரூபா

# ஈழ சுதந்திரன்
# ELASUTANTIRAN



திருவள்ளுவராண்டு
௨௦௨௭
மார்கழி-தை
சனவரி 1996
புத்தகம் : 8 இதழ் : 1

ஃ அருகில் நடக்கும் துன்பியல் நாடகத்தை அன்னை இந்தியா பார்த்துக் கொண்டிருக்கலாமா?

ஃ குறுகிய பகுதியில் வடக்கிலங்கையில் 5 லட்சம் பேர் துன்புறும் கொடுமை!

ஃ படைகள் விலகாமல் தமிழ் மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பமுடியாத பரிதாபம்!

## இலங்கையில் சுமுகத்தீர்வு ஏற்பட
# இந்தியா வழி செய்க!

### அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் கோரிக்கை

கூப்பிடு தூரத்தில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகளை இந்தியா பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. படைகள் விலகாமல் தமிழ் மக்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலையில், ஒரு குறுகிய பகுதியில் 5 லட்சம் பேர் இடம் பெயர்ந்து அனாதைகள் போல் தவித்துக் கொண்டிருப்பதால், அங்கே சுமுகத்தீர்வு ஏற்பட்டு, அவர்கள் விரைவில் தங்கள் வாழ்விடங்களுக்குத் திரும்பி, அமைதியாக வாழ இந்தியா வழி செய்ய வேண்டும். இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கும் ஈழ அகதி மக்களின் குறைபாடுகளையும் உடனடியாகத் தீர்த்துவைக்க வேண்டும்.

இவ்வாறு, சென்னையில் நடந்த அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைப்புக்குழு நடத்திய பத்திரிகையாளர் கூட்டத்தில் அது கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 7-12-95 அன்று சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள பிரஸ் கிளப்பில் நடந்த அக்கூட்டத்திற்கு, ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அருட்திரு முனைவர் கம்பர் மாணிக்கம் தலைமை வகித்தார். ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழக நிறுவனர் சா.செ. சந்திரகாசன் உட்பட தமிழ்நாட்டிலுள்ள அரசுசாராத்தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டு, பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்தனர். அப்போது அரசுசாராத் தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் பத்திரிகையாளர்களிடம் வழங்கப்பட்ட அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:-.

1. பெரும்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ள இந்நூற்றாண்டிலேயே மிகப்பெரும் துன்பியல் நாடகம் நமது அருகிலேயே நடந்துள்ளது.

3000 ஆண்டுகளுக்கும் மேலாக யாழ்ப்பாணத்திலும், அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள 500 ஆயிரம் பேர் சிறீலங்கா இராணுவ நடவடிக்கையின் விளைவாக இடம்பெயர்ந்து ஒரு குறுகிய பகுதிக்குள் துன்புறவேண்டிய கொடுமை இன்று நேர்ந்துள்ளது.

-வசதியான குடியிருப்புகள் தேவைப்படுகின்றன.

-மருத்துவ வசதிகள் கிடையாது.

-சிறார்களுக்கு கல்வி வசதியில்லை.

-உணவுக்கோ பற்றாக்குறை.

#### பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம்

இன்றுஅவர்களுக்கு துணையாக இருப்பது பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் மட்டும்தான். அதுவும் கூட மனிதாபிமான ரீதியில் ஈழத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்தாக வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுக்கும்வரை நிறுத்தி வைக்கப்பட்டுத்தான் இருந்தது. ஒரே ஒரு கப்பல் உணவுப் பொருள்கள் தான் இப்பகுதியைஅடைந்துள்ளது.

2. அவர்கள் தங்களின் சொந்த வீடுகளுக்குத் திரும்ப வேண்டுமானால் இராணுவம் அப்பகுதியிலிருந்து விலகிக் கொள்வோம் என்று அவர்களுக்கு உறுதிமொழி கூறுவது தேவையாகும். அத்துடன் வழமையான சிவில் நிர்வாகத் திற்கும் காலதாமதமின்றி ஏற்பாடு செய்ய வேண்டியது தேவையாகும். உலக சமுதாயத்தின் பொதுக் கருத்தும் நிர்ப்பந்தமும் இன்றி இடம் பெயர்ந்த அம்மக்களுக்கு நீதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது உண்மை நிலைக்கு மாறானதாகும்.

#### மத்திய அரசின் அறிக்கை வேண்டும்

இதில் இந்தியா மிகப் பெரும் பங்கு வகித்தாக வேண்டும். இதற்கு தமிழ் நாட்டில் நடந்துள்ள பொது மக்கள் நடவடிக்கை நல்ல தொடக்கமாகும். இராணுவத் தாக்குதல்களை நிறுத்தி, இலங்கைத் தமிழ் மக்களுக்கு நீதியும் சமாதானமும் கிடைக்க ஆவன செய்ய வேண்டி தமிழ்நாட்டில் நடந்த அனைத்துக் கிளர்ச்சிகளுக்கும் கோரிக்கைகளுக்கும் ஆதரவாக மத்திய அரசு தெளிவான ஒரு அறிக்கை கொடுத்தாக வேண்டும்.

இக்கோரிக்கைக்கு ஆதரவு தருவதன் மூலம் மனித உரிமைகளை நிலைநாட்டும் உணர்வுகளை அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அரசியல் கட்சிகளும் வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

#### மனிதவுரிமை பிரச்சினை

இது ஒரு மனித உரிமைப் பிரச்சினையாக இருப்பதால், மனித உரிமைகளுக்கான அனைத்து அரங்குகளிலும் இதற்காகக் குரல் எழுப்பப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கையில் சிறீலங்கா அரசைப் பொறுத்தவரை நல் வாழ்வு மையங்களையும், அரசு சாராத் தொண்டு நிறுவனங்களையும்இடம்பெயர்ந்த இம்மக்களுக்கு எவ்விதமான உதவிகளும் வழங்க முடியாமல் தடை செய்துள்ளது. ஐ.நா. பொதுச் செயலாளரின் நிர்ப்பந்தத்திற்குப்பிறகுபன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐ.நா. அகதிகள் உயராணையம் ஆகியவற்றின் ஊடாக மட்டும் இத்தகைய உதவிகள் வழங்கப்பட அரசு அனுமதியளித்திருந்தாலும் அது கட்டுபடுத்தப்பட்டதாகவே உள்ளது. ஏனையத் தொண்டியக்கங்கள் உதவி செய்ய விரும்புகின்றன. அவற்றின் உதவிகள் மக்களுக்கு மிக அவசரத் தேவையாக இருப்பினும அவற்றை மேற்கொள்வது அண்மை நாளில் கூடுவது எளிதாக இல்லை. அவசர அவசியமாகத் தேவைப்படுவன உணவு மட்டுமின்றி, மருந்துகள், ஊட்டச்சத்து, கல்வி முதலிய அடிப்படை வசதிகள் அனைத்துமாகும்.

#### இந்தியா உணர்த்த வேண்டும்

இது ஒரு இனப்பிரச்சினையுமாகும். தமிழ் மக்கள் தனிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்படுவது புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. சிங்கள இராணுவம் நீண்ட

(12-ம் பக்கம் பார்க்க)

### புத்தாண்டு, கிறிஸ்துமஸ், பொங்கல் வாழ்த்துக்கள்!

'ஈழ சுதந்திரன்' வாசகர்கள், சந்தாதாரர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களையும், கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களையும், பொங்கல் புதுவாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

புத்தாண்டே வருக! புதுநலம் தருக!
போன ஆண்டுடன் போகட்டும் துன்பங்கள்!
கர்த்தரின் அருளால் கவலைகள் மறைக!
களிப்பைப் பெருக்கி கிறிஸ்துமஸ் ஓங்குக!
இத்தரைத் தமிழர் இலட்சியம் வெல்க
எங்கும் பொங்குக மங்கலப் பொங்கல்!
யுத்தம் நின்று உதிக்கட்டும் அமைதி!
உறவுகள் வளர்க! கனவுகள் மலர்க!

-ஆசிரியர்

## ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

படிப்பகம்

www.padippakam.com

''பண்டு முளைப்பது அரசியே ஆனாலும்
விண்டுஉமி போனால் முளையாதாம்-கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி
ஏற்ற கருமம் செயல்''

—ஒளவையார் (மூதுரை)

(மேலே உள்ள உமி நீங்குதற்கு முன்னர் முளைப்பது அரசியே ஆனாலும் உமி நீங்கிப்போனால் அவ்வரிசி முளைக் காது; அதுபோல, அடைந்த பெரிய வல்லமை உடையவர்க் கும் காவல் வலிமையின்றி, எடுத்துக்கொண்ட செயலைச் செய்து முடித்தல் இயலாது. மனிதன் மண்ணின் மைந்தன் ஆனதால், அவனது முதல் காவல்வலீமை அவனுடைய மண்ணே.)

# தெளிவு

## கண்ணைப்போல ஈழ மண்ணைக் காப்பீர்!

ஆள் இல்லாத யாழ்குடாவைப் பிடித்துவிட்ட களிப்பில் சிறீலங்கா சிங்கள இராணுவம், தமிழ்மக்களின் பாரம்பரியத் தாயகக் கோட்பாட்டை தகர்த்துவிட்டதாக மனப்பால் குடிக்கத் தொடங்கியிருக்கிறது. ஈழம் என்பது இனி இல்லை என்ற இறுமாப்பில் தமிழ்மக்களின் ஏனைய தாயகப் பகுதி யிலும் மக்களை அடித்துக் கலைக்கத் தலைப்பட்டிருக்கிறது.

ஆம்; யாழ்குடாவுக்கு அடுத்தபடியாக தமிழ்மக்கள் செறிவாக வாழும்பகுதி மட்டக்களப்பு ஆகும். இப்போது யாழ்குடாவில் செய்ததைப்போல மட்டக்களப்பிலும் வான் வழி குண்டுமாரி, கடல்வழி பீரங்கித் தாக்குதல், தரைவழி ஷெல் அடி என்று தொடங்கி, தமிழ் மக்களைத் தங்கள் வாழ்விடங்களில் இருந்து துரத்த அகதிகளாக, அனாதை களாக அலையவிட சிறீலங்கா இராணுவம் திட்டமிட்டுச் செயல்படுவதாகத் தெரிகிறது.

1970 வரை மத்திய மாகாணத்தில்-மலையகத்தில் செறிந்து வாழ்ந்த இந்திய வம்சாவளி மக்களை, 'தோட் டங்கள் நாட்டுடைமை' என்ற பெயரால் அவர்களின் தொழிலைப்பறித்து, அவர்களைக் குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றி அனாதைகள் போல அலையவிட்டதன் மூலம் அந்த மண்ணுடன் அவர்களுக்கு இருந்த பிடிப்பைத் தகர்த்து சுவையறிந்த சந்திரிகா, இப்போது ஈழத்திலும் அதையே கையாண்டு முழுத் தமிழ்மக்களையுமே வேரறுந்த சமுதாய மாக்கிவிட விரும்புகிறார்.

ஏனெனில், மலையகத் தமிழர்களைப் பொறுத்தும் அவ்வப்போது இந்தியாவிலிருந்து கூட்டிவரப்பட்டவர்கள் இருப்பினும், அவர்கள் முழுப்பேருமே அப்படி வந்தவர் களல்லர். கண்டியை ஆண்ட பரம்பரையைச் சேர்ந்தவர் களே அவர்களில் பெரும்பாலோராவர். அதாவது மலை யகம் அவர்களின் பாரம்பரியத் தாயகமே ஆகும். இருந்தும் அந்த வாழ்விடங்களிலிருந்து அவர்களை இடம்பெயரச் செய்ததன் மூலம் அதை அடித்து உடைப்பதில் வெற்றி கண்டு விட்டதாய்க் கனவு காண்பவர் சந்திரிகா.

அதே கனவுடன்தான் இப்போது வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்மக்களை அடித்துக் கலைப்பதில், தங்கள் சொந்த வாழ்விடங்களிலிருந்து இடம்பெயரச் செய்வதில் சந்திரிகா தன் படைகளை ஈடுபடுத்தியிருக்கிறார்.

எனவே, தமிழ்மக்கள் தங்கள் தாயக மண்ணை -தமிழீ ழத்தைக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பது இன்றி யமையாததாகும்.

ஆமாம்; ஒவ்வொரு அங்குலத் தமிழ் மண்பற்றியும் மிகமிக விழிப்புணர்வுடன் இருந்தாக வேண்டும். எங்கேயும் சிங்களர் குடிபுகுந்து விடாதபடி; திட்டமிட்ட சிங்களக் குடி யேற்றத்திற்கு தமிழ்மண்ணில் தமிழர்கள் இடம் பெயர்ந் துள்ள இச் சந்தர்ப்பத்தை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளாதபடி பார்த்துக் கொள்ளவேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

எங்கேயாவது சிங்கள நடமாட்டம் தென்பட்டால் உடனே அதைச் சர்வதேச சமுதாயத்தின் பார்வைக்குக் கொண்டுவருவதும், அதற்கெதிராக சர்வதேசக் கருத்தை உருவாக்குவதும் தமிழ்மக்கள் மேற்கொள்ளவேண்டிய உட னடிப் பணியாகும்.

நமது போராட்டத்தின் அடிப்படையே தாயக மண்ணை விடுவிப்பதுதான். தாயகத்திலிருந்து இடம் பெயர்வதல்ல. எனவே புலம்பெயர்ந்த தமிழ்மக்களும் இதுவிடயத்தில் அக்கறை காட்டுவது அவசர அவசியமாகும்.

# யாழ்.முஸ்லிம்வெளியேற்றப்பட்டதுபோல கொழும்பு விடுதியில்இருந்த தமிழர்நிலையும்

### சபையில் ஈ.பி.டி.பி.எம்.பி. கவலை

''யாழ்ப்பாணத்தில் இருந்து 1990இல் முஸ்லிம் மக்கள் எவ்வாறு தங்களது வீடு, வாசல்களை விட்டு 24 மணிநேர அவகாசத்திற்குள் வெளியேற்றப் பட்டார்களோ, அதேபோல கொழும்பில் தமி ழர்கள் தங்கியிருந்த பல விடுதி கள் பொலீஸாரின் திடீர் உத்த ரவினால் 24 மணிநேர முன்ன றிவித்தலுடன் இழுத்து மூடப் பட்டுள்ளன

இவ்விடுதிகளில் தங்கியி ருந்த பல நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந் தைகளும் போக்கிடமின்றி நடுத்தெருவில் அவதியுறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ் மாவட்ட எம்.பி.யான ஆர்.இராம மூர்த்தி (ஈ.பி.டி.பி.) திங்கள ன்று பாராளுமன்றத்தில் கவலை தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மே லும் கூறியதாவது:- வட-கிழக்கு பகுதிகளில்ல் 1983இல் இருந்து யுத்தத்தினானால் 2,50,000இற்கு அதிகமான வீடுகள் தரைமட்டமாக்கப்பட் டுள்ளதாக நான் கருதுகிறேன். இவற்றை மீண்டும் புனர்நிரு மாணம் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் தொகுதி ஒன் றிற்கு 100 வீடுகள் கட்டும் திட் டம் நடைபெற்று வருகிறது. வட-கிழக்கு பகுதிகளில் உள்ள வீடுகள் தகர்த்தழிக்கப்படுவ தாகவே தமிழ்மக்கள் கருது கின்றார்கள்.

கொழும்புக்கு வரும் தமிழ் மக்கள் உறவினருடன் தங்க முடியாதுள்ளது. பதிவு, தேடு தல், விசாரணைக்கு அழைத் தல் போன்ற விடயங்கள்னால் மக்கள் அனைவருமே பாதிக் கப்படுகின்றனர். மண்டபம் முகாம் போல கொழும்பில் அமைப்பதற்கும் அங்கே இருப் பது போல ஆண்கள், பெண் கள் வேறாகவும் பாடசாலை களில் தங்க வைப்பதற்கும் ஒழுங்குசெய்ய அமைச்சர் நினைப்பது தமிழ்மக்களை மலினப்படுத்தும் ஒரு செய லாகும்.

தமிழ்மக்கள் கொழும்பில் விடுதிகளில் பணத்தைக் கட்டி தங்குவதற்கு பதிலாக தர்ம சத்திரங்களில் தங்கு வதற்கு விரும்பமாட்டார்கள்.

வடக்கில் இடம்பெறும் யுத்தம் காரணமாக புலம் பெயர்ந்து கொழும்புக்கு வருப வர்கள் விடுதிகளிலேயே தங்கி நிற்க வேண்டியுள்ளது. பொலீஸ் தேடுதல் காரணமாக உறவினர் நண்பர்கள் வீடு களில் தங்கி நிற்க முடியாது.

விடுதிகளை குறுகிய கால முன்னறிவித்தலுடன் மூடி அங் கிருந்தோரை வெளியேற்றி யிருப்பது மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட செயலாகவே தோன்றுகின்றது.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலில்லாமல் ஆரோக்கியமாக நடந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்நாட்டின் முதுகெலும் பான மலையகப் பகுதி தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கும் லயன்களைப் பாருங் கள். ஆடு, மாடுகள் அடைக் கப்பட்டுள்ளதுபோல் பல நூற் றாண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்று ஐரோப்பிய நாடு களில் ஆடு, மாடுகள் அழகான தொழுவங்களில்வாழ்கின்றன. ஆனால் மலையக மக்கள் இரு நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பழைய சௌகரிய மற்ற லயன்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள். இது வரையில் அவர்களுக்கு தகுந்த வீடுகள் கட்டிக் கொடுக்க வில்லை. இனியாவது கட்டிக் கொடுக்க வேண்டும்.

### யாழ்ப்பாணத்தில்

# தேசிய கொடி ஏற்றியது நன்மையின் ஆரம்பமா? தீமையின் தொடக்கமா?

### அரசே தீர்மானிக்க வேண்டும் என்கிறார் தேசிய முஸ்லீம் முன்னணி தலைவர் மகருப்

இன்று நாட்டில் தலை தூக்கியுள்ள சகல பிரச்சினை களுக்கும் தீர்வு காண இனப் பிரச்சினைக்கு முதலில் தீர்வு கண்டாக வேண்டும். நாட்டின் சகல சமூகங்களும் தங்களின் கடும் போக்கைக் கைவிடு வதன் மூலம்தான் சகலருக் கும் இணக்கமான, நீடித்த ஒரு தீர்வைக் காணமுடியும் என கொழும்பு பல்கலைக் கழக சட்ட பீடத்தில் செவ்வா யன்று நடைபெற்ற அதிகாரப் பரவலாக்கல் பற்றிய கலந் துரையாடலில் உரையாற்றிய தேசிய முஸ்லீம் முன்னணி யின் தலைவர் டாக்டர் எச்.எம் மகருப் தெரிவித்தார்.

தேசிய முஸ்லிம் முன் னணி, கொழும்பு பல்கலைக் கழக முஸ்லிம் மாணவர் பணிக் குழுவுடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசியதாவது:

கடந்த 25 ஆண்டுகளில் உலகெங்கும் நடைபெற்றுள்ள மற்றும் நடைபெற்றுக் கொண் கொண்டிருக்கின்ற யுத்தங்கள் எல்லாம் இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட வையே.

பெரும்பான்மை இனத் தோர் சிறுபான்மையினத் தோரின் உரிமைகளைப் புறக் கணித்தமை இதற்கான காரணமாக அமைந்தன. தென் ஆபிரிக்கா, ருவண்டா ஆகிய நாடுகளில் நிலைமை ஒரு படி மேலே சென்று சிறு பான்மையினத்தோர் பெரும் பான்மையினத்தினரை அடக் கும் நிலை ஏற்பட்டது.

நமதுநாட்டில் தொடர்ந்து வந்த அரசுகள் இனப்பிரச் சினையைத்தீர்க்கத் தவறிய மையின் விளைவையே நாம் இன்று அனுபவித்துக் கொண் டிருக்கிறோம் வடக்கு-கிழக்கு இணைப்பு முஸ்லிம்களுக்கு உகந்ததல்ல என்பதே எமது கருத்து இணைப்பு அவசிய மென்றால் முஸ்லிம்களுக்கான தனியான நிருவாக அலகு ஒன்றை அமைப்பது அவசிய மான ஒன்றாகிவிடும்.

அதிகாரப் பரவலாக்கம் குறித்து அரசின் திட்டத்திற்கு நாம் அனைவரும் ஆதர வளிக்க வேண்டும். தேசியக் கொடி யாழ்ப்பாணத்தில் ஏற்றப்பட்டிருப்பது ஒரு முக் கியமான நிகழ்வே. ஆனால் இது நன்மையின் ஆரம்பமா அல்லது தீமையின் தொடக் கமா? என்பதை அரசின் நட வடிக்கைகள். தான் தீர் மானிக்கவேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் டிலீன் பெரேரா, மற்றும் முஸ்லிம் லீக் இளைஞர் அமைப்பைச்சேர்ந்த எம்.என். ஷாகிட், தேசிய முஸ்லிம் முன் னணியின் அமைப்பாளர் என். எம்.எம். நிசாட் ஆகியோரும் உரையாற்றினர்.

### தொழிலாளர் கவலை

தொழில், தொழிற்பயிற்சி பிரதியமைச்சர் மொன்டி கோ பால்லாவ தமதுரையில் தெரி வித்தாவது:-

பிரதமர் சிறிமா பண்டார நாயக்க தோட்டங்களை தேசிய மயமாக்கியதனா லேயே தோட்டத்தொழிலாளர் பல உரிமைகளைப்பெற்றனர். வெள்ளையர் காலத்தில் அடி மைகள் போல அவர்கள் நடத் தப்பட்டனர். வெள்ளையர் காலத்திலும் தொழிற்சங்கம் அமைத்து தொழிலாளர் உரி மைகளுக்காகப் போராடிய அமைச்சர் தொண்டமானை நாம் பாராட்டவேண்டும். கம் பனிகளுக்கு தோட்டங்கள் கை யளிக்கப்படுவதால் மீண்டும் வெள்ளையர் காலத்துக்கு போய்விடுமோ எனத் தோட் டத் தொழிலாளர் கலக்க மடைந்துள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



# பரிவு காட்டுவதிலே கூட வழக்கமான அரசியல் நாடகமா?

### ஆங்கில அரசத் தந்திரத்துக்குச் சாலையார் கண்டனம்

பாகிஸ்தானில் 'மொகாஜிர்' இன மக்களுக்கு எதிராக அந்த நாடு நடத்திவரும் கொடுமைகளை மனித உரிமை அடிப்படையில் கண்டிக்கும் இங்கிலாந்தின் அரசியல் தலைவர்கள், கடந்த 12 ஆண்டுகளாக ஈழ நாட்டில் தமிழ் இன மக்களுக்கு எதிராகச் சிறீலங்கா அரசு நடத்திவரும் அரச பயங்கரவாதத்தை கண்டிக்காமல் இருந்து வருவது பெரிய வியப்பைத் தருகிறது. இந்த வேதனை மிக்க சூழ்நிலையிலும், இந்தப் பெருமக்கள், அப்பட்டமான அரசியல் லாபம் தேடத்தான் முனைகிறார்களோ என்கிற அய்யத்தையும் அது பெரிதாக எழுப்புகிறது.

அண்மையில் லண்டன் மாநகரில் அனைத்துலக மனித உரிமைகள் குழுவின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இங்கிலாந்தின் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரண்டு கட்சி உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டு மொகாஜிர் இன மக்களுக்கு எதிராகப் பாகிஸ்தானில் நடந்துவரும் கொடுமைகளை (தி.ம. 30-11-95) வன்மையாகக் கண்டித்தார்கள். ''சிந்து மாகாணத்தில் பெரிய அளவில் நடத்து வரும் மனித உரிமை மீறலை மேற்கத்திய நாடுகள் பொறுத்துக் கொள்ள முடியாது. துணைக்கண்ட விவகாரங்களில் முதன்மையாக இப்பிரச்சனையைக் கவனிக்க வேண்டியது அவசியம்'' என்று அந்த உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

''பாகிஸ்தானின்எல்லைப் பாதுகாப்புப் படை சட்ட விரோதமாக மக்களைக் கைது செய்தல், விசாரணை இன்றிச் சிறையில் அடைத்தல், பெண்களை மானபங்கப் படுத்துதல் போன்ற ஈனச் செயல்களில் ஈடுபடுகிறது' இதைத் தடுத்து நிறுத்தும் விதமாக, மேற்கு நாடுகள், பாகிஸ்தான் அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும்'' என்றும் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பாகிஸ்தானில்கொடுமைப் படுத்தப்படும் மொகாஜிர் மக்களுக்கு இங்கிலாந்து பரிவு காட்ட முன் வந்தது உருக்கத்துடன் வரவேற்க வேண்டியதே. ஆனாலும், —இந்த எல்லைகளை மீறி,-ஈழத்துத் தமிழ் மக்கள் மீது தனது முப்படைகளையும் ஏவிக் குண்டு மாரி பொழிந்து வட இலங்கை தமிழ்ப் புகுதியையே சுடுகாடாக்கிக் கொண்டு இருக்கும் சிறிலங்கா அரசுக்கு நெருக்கடி கொடுத்து அந்தப் பயங்கரமான இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசியல் வாதிகளுக்குத் தோன்றாமல் போனது என்ன மனிதநேயம் என்றே நமக்கு விளங்கவில்லை.

ஒரு கண்ணில் வெண்ணெயும் மறு கண்ணில் சுண்ணாம்பும் வைக்கிற இங்கிலாந்து நாட்டின் அரசியல், அப்பட்டமான வஞ்சக அரசியல் என்பதை (இப்போதாவது) தமிழ்மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

---

# மூங்கில் ஊரணி அகதி மக்களின் கோரிக்கைப் பேரணி

### மானாமதுரையில் மக்கள் ஆதரவு

18 11-95ல் மானா மதுரை மூங்கிலூரணி இலங்கை அகதிகள் முகாமைச்சேர்ந்த மாணவ மாணவியர் இளைஞர் பெண்கள் பெரியோர் உட்பட 300க்கு மேற்பட்ட இலங்கை மக்கள் காலை 9 மணியளவில் முகாமிலிருந்து புறப்பட்டு கால் நடையாக சுமார் 7 கிலோ மீற்றர் தூரத்தை அமைதிப் பேரணியாகக் கடந்து மானா மதுரை வட்டாட்சியர் அலுவலகத்தை அடைந்தனர்.

1. போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு மருந்து, உணவும் வழங்கல்.

2. இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி தமிழர்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணல்.

3. இலங்கையில்பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவ முன் வரும் பொதுத் தாபனங்களை தடை செய்தலை நிறுத்துதல்.

என்பனைவற்றை செய்ய இலங்கை அரசை இந்திய மத்திய மாநில அரசுகள் வற்புறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றை வட்டாட்சியரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களது பேரணிக்கு அரசு ஊழியர்களும், காவல் துறையினரும் அனுமதியும் ஒத்துழைப்பும் வழங்கினர்.

தகவல் : *சி. மரியதாசன்*
மாவட்ட சமூக சேவையாளர்.
பசும்பொன் மாவட்டம்,

---

*மட்டக்களப்பில் வியாபார வீழ்ச்சி!*

## போக்குவரத்து குறைந்தது

மட்டக்களப்பில் இருந்து கல்முனை, வாழைச்சேனை போன்ற பிரதான நகரங்களுக்குச் செல்லும் வீதிகள் கடந்த தில தினங்களாக மக்கள் நடமாட்டம் குறைந்து களையிழந்து காணப்படுகின்றன.

இவ்வீதிகளில்பஸ்போக்குவரத்து வழமை போல காணப்பட்டாலும் தனியார் வாகனங்களின் போக்குவரத்து குறைந்துள்ளது. மட்டக் களப்பு நகருக்கு அன்றாட முக்கிய கருமங்களுக்காக வருகின்ற மக்களின் எண்ணிக்கையும் குறைந்திருக்கின்றது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் கடந்த ஒருவார காலத்தினுள் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களின் காரணமாகவே பொதுமக்கள் தங்களது நடமாட்டத்தைப் பெரிதும் குறைத்துக் கொண்டுள்ளனர்.

இதே வேளை மட்டக்களப்பு, ஏறாவூர், வாழைச்சேனை நகரங்கள் மாலை 6 மணியாவதற்குள் மக்கள் நடமாட்டம் குறைந்து களையிழந்து விடுவதையும் காண முடிகிறது. நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் வியாபாரம் வீழ்ச்சியடைந்திருப்பதாக வர்த்தகர்கள் கவலைப் படுகின்றனர்.

---

## அகதிகள் திருமலைக்கும் வருகை

வடபகுதியில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த சில குடும்பங்கள் திருகோணமலைக்கும் வந்து சேர்ந்துள்ளன. இவர்கள் தமது உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை கிளை நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கிளையின் தலைவர் ஈழத்து நாதன் தெரிவித்தார். பாய்கள், கோடாரி போன்ற பொருள்களை வழங்கியுள்ளதாக பேரவையின் செயலாளர் செ. சிவபாதசுந்தரம் தெரிவித்தார்.

---

# மடல் வழிச் செய்திகள்

## ஒரே வீட்டில் 40 பேர்

சாவகச்சேரியில் இருந்து நாதன் என்பவர் சென்னையில் உள்ள துரை என்பவருக்கு எழுதிய கடிதம்.

எங்களுடைய வீட்டில் மொத்தம் 40 பேர் இருக்கிறோம். இரவில் ஷெல்கள் விழுந்து கொண்டிருக்கின்றன. விழுந்தால் எங்காவது யாரோ இரண்டு பேராவது செத்த செய்தி தான் எமக்கு கிடைக்கும்.

சாப்பாட்டுச் சாமான்கள் எல்லாம் சரியான விலை. நாங்கள் இப்போ ஒரு நேரம் மட்டுமே சாப்பிடுகிறோம். இருக்கிற அரிசியை வைத்து கஞ்சிதான் காச்சிக் குடிக்கிறோம். மருந்துகளோ, குளிசைகளோ கிடைப்பது பெரும் கஸ்டமாக இருக்கிறது.

கோப்பாயில் வீடு வாசல் எல்லாம் என்ன நடந்ததோ தெரியாது. ஆடுகளையும் அவிழ்த்துவிட்டுத்தான் வந்தோம்.

பலர் பள்ளிக்கூடங்களிலும் ஆஸ்பத்திரிகளிலும் வாசிகசாலைகளிலும் தங்கி இருக்கிறார்கள் இந்தப் பக்கமும் ஆமி வருமோ தெரியாது. தினமும் ஒரே பயம்தான். பள்ளிக்கூடங்களும் இல்லை. பிள்ளைகளும் பள்ளி இல்லாத காரணத்தால் விறகு பொறுக்கவும் க்யூவில் நின்று கிடைக்கிற சமான்களை வாங்கவும் போய் வருவார்கள். பாவம் அவர்களுக்கும் ஒரே ஒரு நேரக் கஞ்சிதான்.

## கதவுகள் உடைத்து கொள்ளை

யாழ்ப்பாணம் வடலியடைப்பு என்ற இடத்தில் இருந்து எஸ்.எஸ்.ஆர். என்பவர் 10-10-95இல் கிருஷ்ணகிரியில் இருக்கும் அவரது அண்ணன் பி. எஸ். ஜே. என்பவருக்கு எழுதி இருப்பது-

நான் 9-8-95இல் உங்களுக்கு ஒரு கடிதம் போட்டேன். அப்போ எங்கள் இடமெல்லாம் ''ஆமி'' வந்துவிட்டது. அரா்லியில் இருக்க முடியாமல்தான் கோப்பாயிலும் குலசேகரம் வீட்டில் 12 நாள் மட்டும் இருந்தோம். ஆமி போன பின் ஆடிப்பிறப்பன்று தான் வீட்டிற்கு (வடலியடைப்பு) வந்தோம். 21-9-95இல் மறுபடியும் வடலியடைப்புக்கு ஆமி வந்தது. மூன்று நாட்களாக வடலியடைப்பை விட்டுப் போகவில்லை. மாதகலுக்கு ஆமி போன பின்னால் நாங்கள் வீடுகளுக்கு சென்றோம். அங்கு எல்லோர் வீடுகளும் கதவுகள் உடைக்கப்பட்டு வீட்டில் உள்ள சாமான்களை எல்லாம் எழுத்துப் போய்விட்டார்கள். இப்ப பகலில் மட்டும் வீட்டில் இருக்கிறோம். இரவில் படுக்கைக்கு மட்டும் சித்தன் கேணிக்கு ஓர் வீட்டிற்கு போவோம்.

நாம் இப்போ வீட்டை விட்டு வெளிக்கிட முடியாது. எந்த நேரத்திலும் பிரச்சனை நடக்கலாம், பிரச்சனை இல்லாத இடங்களுக்கு சைக்கிளில்தான் போகவேண்டும்.

(இக்கடிதம் ''சூரிய ஒளி'' நடவடிக்கைக்கு முன்னர் எழுதப்பட்டது.)

(யாழ்ப்பாணப் போர் உச்ச சட்டத்தில் நடந்து கொண்டிருந்த சமயம் யாழ்ப்பாணத்தில் இருந்து சீலன் என்பவர் கொழும்பில் உள்ள உறவினருக்கு எழுதிய கடிதம்)

இங்கு பிரச்சனை தொடங்கியதும் எங்கள் ''சேர்ச்'' சனம் யாவரும் ரவுணில்' இருப்பது என தீர்மானித்திருந்தனர். பின்பு நவ. 3ம் திகதி எல்லோரையும் 'ரவுணை' விட்டு வெளிக்கிட 'அட்வைஸ்' பண்ணியதால் கனபேர் இரவோடிரவாக வெளிக்கிட்டு சாவகச்சேரி பக்கம் போய் விட்டார்கள் அப்படி இருந்தும் சில பேர் எது நடந்தாலும் நடக்கட்டும் என்று இருந்து விட்டார்கள். 13ம் திகதி மீண்டும் மக்கள் அனைவரும் வெளியேற வேண்டும் எனக் கூறப்பட்டது. இதனையடுத்து இரண்டு சோடி உடுப்புகளுடன் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு சாவகச்சேரி பக்கம் போய் விட்டனர்.

3ம் திகதி சனம் லட்சக்கணக்கில் வெளிக்கிட்டு எங்கே போறது எனத் தெரியாமல் நடந்துகொண்டே இருந்தார்களாம். சைக்கிள் ஓட முடியாது ஒரே சன வெள்ளம். குளிர் பயம் வேறயாம். நடக்கும்போது ஒருவரும் நிறுத்த முடியாதாம் அவ்வளவு தொகையாய் சனம் ஒரே திசைநோக்கி நடந்தபடி இருந்தார்களாம். 3 குழந்தைகள் நடக்கும் போது கீழே விழுந்து அடிபட்டதில் இறந்து விட்டார்கள்.

சனம் தெருவோரமும், மர நிழலிலும் இருந்து சமைத்து தின்கிறார்கள். பணம் இல்லை. சாப்பாட்டுச் சாமான் இல்லை, மருந்து இல்லை. கொழும்புக்கு வருவதற்கு 15-25வயது பிள்ளைகளுக்கு பாஸ் இல்லை சரியானகஷ்டம்.

இப்ப கொழும்பிலயும் புதுச்சட்டம் யாழ்ப்பாணத்தில் இருந்து வருபவரை வானியாரில் மறித்து பொலீஸ் எங்கே நிற்கப் போகிறார்கள் எனக் கேட்டு அதன்பின் கொழும்பில் உள்ளவர்களுக்கு பொலீஸ் அறிவிக்குமாம். அப்போது கொழும்பில் உள்ளவர்கள் இங்கு வருபவர்களுக்கு பொறுப்பு நின்றால் அவர்கள் வானியாவுக்கு போய் கூட்டி வர வேணும். இந்த நடவடிக்கையால் பலர் கொழும்பு வறது நின்று போட்டுது.

இவ்வாறு அவர் எழுதியுள்ளார். -

*தொகுப்பு : ஆர். ஆர். எஸ்.*

www.padippakam.com



# கவிதைச் சரம்

## வழி ஒன்று கூறுங்களேன்!

ஈழத்து இரத்தினங்கள்
எதிர்காலப் பொக்கிஷங்கள்
பைந்தமிழின் சித்திரங்கள்
எங்கள் தமிழ்த் தாயின்
பால் முகம் மாறா
பாலகப் பூ முகங்கள்
பரிதவித்துப் போவதென்ன!
பாவிகளின் குண்டுகளுக்கு
பலியாகி விழ்வதென்ன?
விதியென்று சொல்லலாமா!
இல்லை.........இல்லை
சத்தியமாய்ச் திரியேதான்!
ஈழத் தமிழ் இனத்தை
வேரோடு அழிக்கவென்று
வெறிபிடித்த அரக்க இனம்
மதி இழந்து நடக்குதங்கு!
எங்கள் அப்பாவி
இனம் அங்கு
அடிமைகளாய் ஆனது இன்று!
உண்ண உணவில்லை
உயிர்படும் துயரமும்
கொஞ்சமில்லை!
உறங்க வழியுமில்லை!
நொந்து போன உடலுக்கோ
நோய் தீர்க்க மருந்துமில்லை!
பரந்த உலகத்தில்
எம் இனம் படும் துயரை
பார்ப்பதற்கோ யாருமில்லை!
சித்தம் கலங்கிய
பித்த அரசுதான்
சுத்தமாய் நடிக்கிறது!
சொல் ஒன்று
செயல் ஒன்றாய்
ஆட்சி நடக்கிறது!
தமிழ் இனத்தின் இறப்பினிலே
சுகம் பல காண்கிறது!
உலகத் தமிழ் இனமே
ஓங்கிக் குரல் கொடுங்கள்
ஈழத் தமிழ் இனத்தை
வேதாளக் கூட்டமது
வேரோடு சாய்க்கு முன்னம்
உலகத் தமிழ் இனமே
எம் இனத்துக்காய்
ஓங்கிக் குரல் கொடுங்கள்
வாழ வழி வகுங்கள்!
அமைதியை விரும்பும்
ஐ.நா. சபையும்
மௌனமாய் இருப்பதென்ன?
ஈழத் தமிழன் என்றால்
இழிவாகிப் போனதுவா!
வேடிக்கை மனிதர் என்று
எம்மை விளையாட்டாய்
-எண்ணுவதா?
இகத்திற்கு எமது இன்னல்
இனிதாகிப் போனதுவா!
மனித நேயம் உள்ளவர்களே
எம் இனம் படும் துயரை
ஏறெடுத்துப் பாருங்களேன்!
இனியாவது ஈழத் தமிழ் இனம்
பிழைக்க-தழைக்க
வழி ஒன்று கூறுங்களேன்!
இறைஞ்சித்தான் கேட்கின்றோம்
ஏற்றவழிதான் செய்யுங்களேன்.

இவ்வண்ணம்
...கிரா தேவசகாயம்
இ. அ. முகாம்,
...காகநல்லூர்,
...நெல்லை.

## ஈழத்தாயின் தாலாட்டு!

பல்லவி

ஆராரோ ஆரிராரோ ஆராரோ!
ஆராரோ ஆரிராரோ ஆராரோ!

அனுபல்லவி

ஆராரோ ஆரிராரோ ஆராரோ! நம்
ஆன்றோர்கள் கதை நீயும் கேளாயோ!
ஆடித்தீயில் வெந்த மன்னர் யார் யாரோ? நம்
அன்னைத் தமிழ் படும் பாட்டைக் கேளாயோ! (ஆராரோ)

பத்துலட்சம் மக்கள் கொண்ட நாட்டிலே! இன்று
பாதிப்பேரின் மண்டை ஓடு காட்டிலே!
வெள்ளை மனம் கொண்ட பிள்ளை கையிலே!
வேலெடுத்த காரணம் ஒன்றும் பொய்யில்லே! (ஆராரோ)

நாடு விட்டு நாடு வந்தோம் நாமெல்லாம்! நல்ல
அன்பு நெறி காத்து நிற்போம் பாரெல்லாம்!
போர் முனையில் நீதி செத்து நாளாச்சு! திரும்பிப்
போன மக்கள் கதி இன்று என்னாச்சு? (ஆராரோ)

வேளை வரும் நாளை என்றும் உன்னாலே! என்று
விழித்திருந்து பாடுகின்றேன் கண்ணாலே!
காலை மாலை என்றும் நாளும் மண்மேலே! நாம்
கடவுளையே நம்பி வாழ்வோம் பண்ணாலே! (ஆராரோ)

பாடலாசிரியர்
கே.எஸ். காளிமுத்து

## கண்ணீர் மலர்கள்

புதிய மலர்களே!
நீங்களும் கூட போர்க்களத்தில் பிறந்தீர்களா?
இன்று மட்டும் நீங்கள் அழப்போவதில்லை
என்றுமே நீங்கள் கண்ணீர்ப்பூக்கள்தான்
இரத்தத்தில் வரையப்பட்ட கோலத்தின்
இல்லத்தில் இன்புற்றார் எவர்?
உங்கள் விதிகூட
சமாதானப் பேச்சைப் போல
அர்த்தமற்றது தானே!
அமைதி என்பதுஎன்றும்கனவாகிப் போனதால்
கண்ணீர்ப்பூக்களே! கண்ணை மூடுங்கள்
என்றுமே உங்களுக்கு
வெடிகுண்டு மட்டுமே தாலாட்டு!
கருவிலே இருக்கும் போதே
கேட்டு விட்டதால் கண்ணுறங்க மறுத்தாயோ!
நீடுதுயில் துயில்வதற்கு
நீண்ட நேரம் தேவை இல்லை.

செ. சக்திராஜன், (ஈழவன்)
திருச்சி-1.

## எதிர்காலம் சிறக்காதா?

அன்று தொடங்கிய யுத்தம்
இன்றும் சிந்துதே ரத்தம்
போதாதோ பட்ட கஷ்டம்
போதுமே ஏற்பட்ட நஷ்டம்

வாராதா எம்மிடம் அமைதி
வற்றாதோ ஓடும் குருதிநதி
பாராதோ உலகம் எம்மை
பலிக்காதோ ஈழத்து நன்மை!

கல்லறைகள் மூடாதோ
கருவிகளின் சத்தம் ஓயாதோ
நல்லகாலம் பிறக்காதா
நம் எதிர்காலம் சிறக்காதா

கே. பாலேந்திரன்

## ஏற்ற விடுங்கள்

ஈழம் வடிக்கிறது கண்ணீர்
தமிழினம் அழிகிறது செந்நீரில்
கேட்பதற்கோ ஆள் இல்லை
கேள்விக்குறியாய் அலைகின்றோம்

உண்ண உணவு இல்லை
உடுக்க உடை இல்லை
உறவுகள் ஏதும் வரவில்லை
உலகத்தார் இதை உணரவில்லை
மகிழ்ந்து வாழ்வதற்கோர் மனையுமில்லை

மரணம்தானா எங்கள் நுழைவாயில்
மரணத்தில் நாளும் மடிகின்றோம்
மனிதர்களே கேளுங்கள்
மரணவாயில் தன்னை அடையுங்கள்

இதயம் உள்ளவர்களே கேளுங்கள்
இனவெறி பிடித்தவர்களே கேளுங்கள்
இன்னுமா தீரவில்லை உங்கள் இரத்ததாகம்
இழைத்திடும் கொடுமைகளை இன்றே நிறுத்துங்கள்
இலங்கையின் வேந்தர்களே இன்றே கொடுத்துவிடுங்கள்
ஈழத்தில் எங்கள் உரிமைதனை

ஏனிந்தத் தாமதம் எதற்காக வீண்வாதம்
எடுத்துவிடுங்கள் உங்கள் படைகளை
ஏற்ற விடுங்கள் எங்கள் வாழ்க்கைப் பயணத்தை
எல்லோரும் எல்லாமும் எப்போதும் பெற வேண்டும்

எஸ். சுமதி
இலங்கை அகதி முகாம்,
இராயனூர், கரூர்.

## ஓ ஈழத்தமிழா!

ஈழம் என்னும் திருநாடு
ஈன்றெடுத்த தமிழா
அது காவியாகும் இன்றைய நிலைகண்டு
ஓரம் கட்டாதே தமிழா

வாசம் கொண்ட ஈழம்
பிணம் தின்னிக் கழுகுகளால்
அழிக்கப்படுகின்றதே தமிழா

வேசம் கொண்ட கொள்கையுடன்
வாழாது ஈழத்தின்மீது துவேசம்
கொண்ட பகைவர்களை
நாசம் செய்ய வா தமிழா!

ஈழத்துக்குள் நிகழும் சகோதரப்
பகைமையைப் பயன்படுத்தி
தினம் ஈழத்தமிழனை பாடை
கட்டுகின்றது இனவாத அரசு தமிழா
ஈழம் எரிந்து போகுமுன்
சகோதரப் பகைமையை மறந்து
ஈழத்துக்கு ஆதரவாக ஒன்றாய்த்
திரண்டிடு தமிழா!

இனவாதிகளின் பசிக்கு ஈழத்தின்
நாளை கதாநாயகர்கள் சிசுவிலேயே
இரையாகுகின்றனரே தமிழா
இனவாதிகளைக் கொசுக்களாய்
நசுக்கி ஈழ மண்ணை அவர்களின்
கொடுமையில் இருந்து காப்பாற்ற வா தமிழா!

இனவாத யுத்தத்தால் ஈழம்
இரத்தக்கடல் ஆனதே தமிழா
இனவாதத்தை ஒழித்து
உன் இதயத்தில் உதயமான
ஈழ தீபத்தை ஈழ மண்ணில் ஏற்றவா தமிழா!

பி.எஸ். அன்ரணி,
கீழ்ப்புதுப்பட்டு.

## கம்பன் கழக நிருவாகிகள் விசாரணையின்பின் விடுதலை

வடக்கில் இருந்து கொழும்பு வரும் வழியில் மாலை வவுனியா ரயில் நிலையத்தில் வைத்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அகில இலங்கை கம்பன் கழகத்தைச் சேர்ந்த நிருவாகிகள் மூவரும் மறுநாள் வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதனன்று மாலை கொழும்பு செல்லப் புறப்பட்ட ... ரயில் புறப்படவிருந்த வேளையில் ரயிலில் இருந்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

தாண்டிக்குளத்திற்கு கொண்டு செல்லப்பட்ட தாங்கள் அங்குராணுவப் புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மறுநாள் வவுனியா ரயில் நிலையத்துக்கு மீண்டும் அழைத்து வந்து விடப்பட்டனர்.

# ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத்தின் 1994-95ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## நிலைக்கத் தக்க அபிவிருத்திக்கான மாற்றுத் திட்டங்கள்

1. ஈழத் தமிழர்களின் தாயகம் சிங்களப் படைகளின் வெறித்தாக்குதல்களால் பல்வேறு வகைகளில் சிதைக்கப் பட்டுள்ளது. சுருக்கமாகச் சொல்லப் போனால் ஈழத் தமிழர் தாயகத்தை மீண்டும் ஆரம்பத்தில் இருந்தே கட்டி எழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு புதுப்புது நிலைக்தக்க அபிவிருத்திக்கான மாற்று ஆலோசனைகளை மக்களிடையே பரப்ப வேண்டும். ஒருங்கிணைந்த, தொடர்ச்சியாக நிலைத்து நிற்கக் கூடிய சுற்றுப்புறச் சூழலை பாதிக்காத மாற்று அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடச் செய்வதற்கான திட்டங்களை கழகம் அகதி மக்கள் மத்தியிலே இவ்வாண்டும் பரப்பி வந்துள்ளது. இதன் காரணத்தால் அமைதி திரும்பியதும் நாட்டுக்கு திரும்பும் அகதிகள் தாயகத்தில் கால் எடுத்து வைத்த நேரம் தொடக்கம் இப்புதிய அபிவிருத்திக் கண்ணோட்டத்துடன் தமது தாயகத்தை கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். இத்திட்டத்தின் கீழ் மரபு சாரா சக்தி வளங்களைப் பயன் படுத்தும் கருத்துக்களும் குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்கு நன்மை தரத்தக்க அபிவிருத்தி செயல்பாடுகளும் அகதி மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருகின்றன.

## ஜனநாயகக் கோட்பாடுகளை மீண்டும் நிலை பெறச் செய்யும் திட்டம்

2. சட்டம், நீதி, நியாயம் ஆகியன அழிந்து அராஜகம் தாண்டவமாடும் பயங்கர வாதத்தின் பிடியில் ஜனநாயகம் அழிந்து போன நிலை ஈழத்தமிழர் தாயகத்தில் ஏற்பட் டுள்ளது. இந்த நிலையை மாற்ற மீண்டும் ஜனநாயகத் தையும், ஜனநாயக அமைப்புகளையும் நிலைக்கச் செய்வதற் காக மக்களிடையே இது பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத் தவும் ஜனநாயக அமைப்புகளை ஊக்குவிப்பதும், அனைத்து செயல்பாடுகளும் மக்கள் பங்களிப்போடு செயற்பட வைப்ப தும் கழகத்தின் திட்டமாக இவ்வாண்டும் இருந்து வந்துள் ளன. இம்முயற்சியினால் அழிந்து போன ஜனநாயகத்தை ஈழத்தமிழர் மத்தியில் மீண்டும் நிலைபெறச் செய்யும் வாய்ப் புகள் அதிகமாக ஆகியுள்ளன.

## மாந்தநேயக் கோட்பாடுகளைப் பரப்பிடும் திட்டம்

3. ஈழத்தமிழர் தாயகத்தில் நிலைத்திருக்கும் அராஜக சூழலில் மாந்தநேயம் அழிந்து வரும் நிலைமையைத் தடுத் திடவும் மீண்டும் மக்கள் மாந்த நேயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்திடவும் இவ் வாண்டும் கழகம் அகதி மக்கள் மத்தியில் மாந்த நேயக் கோட்பாடுகளை தொடர்ந்தும் பரப்பி வந்துள்ளது. இம் முயற்சியில் கழகம் பன்னாட்டுச் செஞ்சிலுவை சங்கத்தின் ஐ. சி. ஆர். சி. பிரதிநிதிகளை அழைத்து மக்கள் மத்தியில் அக்கருத்துக்களை பரப்பிட நடவடிக்கை எடுத்து வந்துள்ளது.

## அகதிகள் பாதுகாப்பு நடவடிக்கைகள்

4. சொந்த நாட்டை விட்டு இன்னொரு நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்கு தஞ்சம் புகுந்த நாட்டில் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவது மட்டுமல்லாது மனித உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வழியில் கழகம் இவ்வாண்டு தொடர்ந்தும் அகதி களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வந்துள் ளது. இம்முயற்சியினால் அகதிகள் ஓரளவு பாதுகாப்பாக வாழக் கூடியதாக இருந்து வந்துள்ளது.

## அமைதிக்கான முயற்சிகள்

5. பல ஆண்டுகளாக வன்முறை நடவடிக்கைகளால் மக்களின் வாழ்க்கை சீரழிந்த நிலையில் நாட்டில் அமை தியை ஏற்படுத்துவதற்கும் போர் நிறுத்தத்தை வலியுறுத்து வதற்கும் மோதலை ஊக்குவிக்கும் சக்திகளை முறியடிக்கவும் அப்பாவி மக்களுக்கு உயிர்ச் சேதம், உடமைச் சேதம் விளை விக்கும் இராணுவ தளவாடங்களைக் கொள்முதல் செய்வதை தடுப்பதற்கும் கழகம் பல்வேறு முயற்சிகளை இந்த ஆண்டி லும் எடுத்து வந்துள்ளது. 1994 இறுதியிலும் 1995 ஆரம் பத்திலும் சில மாதங்களாக இலங்கையில் ஏற்பட்ட போர் நிறுத்தத்திற்கு வலு ஊட்டவும், அவ்வமைதி தொடரவும் கழகம் முயற்சிகளை எடுக்க வந்தது.

## நியாயத் தீர்வுக்கான முயற்சிகள்

6. ஈழத் தமிழர்கள் நியாயமான உரிமைக் கோரிக்கை களைப் பற்றி இலங்கையிலும், இந்தியாவிலும், வெளிநாடு களிலும் தெளிவையும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், ... நியாயமான கோரிக்கைகளை மறுத்து வரும்

எடுத்து வந்துள்ளது நியாயமான தீர்வு வராமல் இருப்ப தற்கு, சிறீலங்கா அரசு, வெளிநாடுகளில் இருந்து பெறும் நிதியை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் போருக்குப் பயன்படுத்தி வருகிறது என்பதை தக்க ஆதாரங்களுடன் வெளிப்படுத்தி இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகள் சிறீலங்கா அரசு தமிழர்களுக்கு ஒரு நியாயமான தீர்வைத் தராவிடில் தாம் வழங்கி வரும் நிதியுதவியை நிறுத்தவோ, குறைக்கவோ வேண்டும் என்று கழகம் பிரச்சாரம் செய்து வந்துள்ளது.

## சிறப்புக் கலந்துரையாடல்கள்

இலங்கை இனச் சிக்கலைத் தீர்ப்பதில் ஈடுபாடு கொண்ட இலங்கையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் இந்தியாவில் உள்ள முக்கிய பிரமுகர்கள் மற்றும் வெளிநாடு களில் உள்ள முக்கிய பிரமுகர்கள், தமிழர்கள் வரும் வேளை, இலங்கை இனச் சிக்கல் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல்களை கழகம் ஏற்பாடு செய்து வந்துள்ளது. இத்தகைய சிறப்புக் கலந்துரையாடல்களினால் முக்கிய கருத்துப் பரிமாறல்களும் பிரச்சினைகள் பற்றிய தெளிவும், விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டது மட்டும் அல்லாமல் சில பிரச் சினைகளைத் தீர்ப்பதற்கும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

## சிறப்பு பணிகள்

(அ) ஈழ விடுதலைக் கோரிக்கையை பயங்கரவாதமாகச் சித்தரிக்க முயன்ற, முயலும் இலங்கை மற்றும் பன்னாட்டுச் சக்திகளை முறியடிக்கும் முயற்சி.

(ஆ) தனி நபர் ஆதிக்கம் மற்றும் தனி இயக்க நலன் மட்டுமே கருதி ஈழத்தின் ஜனநாயக சக்திகளை அழிக்க முற் படும் அமைப்புகளை அடையாளம் கண்டு அம்பலப்படுத்தும் முயற்சி.

(இ) அமைதி, மாந்தநேயம், ஜனநாயகம், அறவழி ஆகியவையே பெரும்பான்மை ஈழத் தமிழ் மக்களின் கோட் பாடுகள் என்பதை உலக அரங்கில் புலப்படுத்தும் முயற்சி.

(ஈ) இந்தியாவுக்கும், குறிப்பாக தமிழ் நாட்டிற்கும் ஈழத் தமிழ் மக்களுக்கும் இடையே பிளவையும் பேதத்தையும் உருவாக்கும் தீய நோக்கங்களை முறியடித்து புரிந்துணர் வையும் நட்புறவையும் வளர்த்தெடுக்கும் முயற்சி.

இவை சென்ற ஆண்டைப் போலவே இவ்வாண்டும் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு அத்திசையில் வெற்றியும் ஈட்டி வருகிறது என்பதைக் கூறிக் கொள்வதில் பெருமைப் படுகிறோம்.

## முடிப்புரை

'சாண் ஏறினால் முழம் சறுக்கும்' என்பது ஈழத் தமிழர் விடயத்தில் இயல்பாக நடந்து வருகிறதென்றாலும் அதற் காகச் சோர்வுற்றுப் பின்னடைந்து விடாமல் இயன்ற வழி களிலெல்லாம் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்ல கழகம் முயன்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்-செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

அதாவது தாம் தொடங்கிய செயலை முற்றுப் பெற முடிக்க வேண்டுமெனக் கருதுபவர் தம் உடம்பிற்கு வரும் வருத்தத்தை நோக்கார். பசி எடுப்பதையும் பார்க்க மாட் டார். மாற்றார் கழுத்தறுப்புச் செய்வதைக்கண்டும் கலங்கார். காலத்தின் அருமையையும் கருதார்! பிறர் செய்யும் அவமதிப்பையும் மனத்தில் கொள்ளார்! தாம் மேற்கொண்ட கடமையிலேயே கண்ணாக இருப்பார் என்று குமரகுருபரர் சொல்வதைப் போல கழகமும் தனது கடமையிலேயே கண்ணாக இருந்து செயலாற்றி வருகிறது. கழகத்தின் செயற்பாட்டுக்கு உள்ளர்த்தங்கள் கற்பித்த பலர் இன்று செயலரங்கிலேயே இல்லை என்பதையும் கழகம் மட்டுமே நாட்டில் தொடங்கிய சேவையை கடல் கடந்தும் இன்றும் இங்கும் தொடர்ந்து ஆற்றி வருகிறது என்பதையும் கூறிக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். ஈழ தேசிய இனத்தின் இறுதி இலட்சியம் கைகூடும் வரை இது தொடரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சோதனையான காலங்களிலும் கழகச் சாதனைக்குத் துணை வந்த கழக உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கும், கழகத்திற்கு உதவி வரும் உள்ளங் களுக்கும், கழகத்துடன் ஒத்துழைத்து வரும் பெருமக்கள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் இவ்வாண்டறிக்கையை நிறைவு செய்கிறோம்.

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்

## பத்திரிகைச் செய்திகள்

**25—11—95**

போரை முடிவுக்கு கொண்டுவர இந்தியாவின் மத்தியஸ்தம் தேவையென்று EPRLF பொதுச்செயலாளரும், நாடாளு மன்ற உறுப்பினரு மான பிரேமச்சந்திரன் நேற்று நிருபர்களிடம் தனது கோரிக் கையை தெரிவித்தார்.

(தினமணி, கதிரவன், இந்து)

தமிழர்கள் மீது இராணு வம் நடத்தி வரும் தாக்கு தலுக்கு கண்டனம் தெரிவித்து காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் நேற்று கறுப்புக் கொடி ஊர்வலம் நடத்தினர்.

(தினமணி)

இராணுவம் உடனடி நட வடிக்கையாக 10,090 இளை ஞர்களை படையில் சேர்க்கும் நடவடிக்கை துவங்கியிருக் கிறது.

(தினமணி)

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் புலிகள் வெடிமருந் துகளை ஏற்றிக் கொண்டு லாரியில் சென்று கொண்டி ருந்த போது திடீரென வெடி மருந்துகள் வெடித்ததில் 14 புலிகள் கொல்லப்பட்டனர்.

(தினமணி, தினகரன், கதிரவன், இந்து)

வெலிகந்த என்ற இடத் தில் ரோந்துப் பணியில் இருந்த இராணுவத்தினரை புலிகள் தாக்கியதில் 11 வீரர் கள் கொல்லப்பட்டனர். இரண்டு அதிகாரிகளும் மூன்று வீரர்களும் காயமடைந்தனர்.

(தினமணி, இந்து)

இனப் படுகொலையை கண்டித்து கோவளம் அகதி கள் முகாமிலுள்ள அகதிகள் நாளை கண்டன உண்ணா விரதப் போராட்டம் நடத்து கிறார்கள்.

(தினகரன்)

**26—11—95**

யாழ்ப்பாண நகரில் விஷ வாயு செலுத்த புலிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முயன்ற போது இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தியதில் 80 புலிகளும் 4 வீரர்களும் கொல் லப்பட்டனர். 20 பேர் காய மடைந்ததாக இராணுவ அதி காரி மேஜர் திலக் தனுவில்லா கூறினார்.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன், இந்து)

ஈழப் பிரச்சினைக்கு அரசி யல் தீர்வு காணவேண்டும் என சிங்கள அரசாங்கத்தை இந்திய அரசு வற்புறுத்தக் கோரி வருகிற 30ம்தேதி தமிழ் நாடு முழுவதும் முழு அடைப்பு நடத்தப்படும் என நேற்று சென்னையில் நடந்த அனைத் துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன், இந்து)

புலிகள் தங்களது ஆயுதங் களை ஒப்படைத்து விட்டால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக் கிறோம் என்று சந்திரிகா நேற்று வார இதழுக்கு பேட்டி யளித்தார்.

www.padippakam.com



## வாசகர் நெஞ்சம்

ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத்தின் சார்பில் 'ஈழ சுதந்திரன்' இதழின் முதல் பக்கத்தில் போரை நிறுத்தி, சிங்கள இனவெறி ராணுவம் தமிழ்ப் பகுதிகளிலிருந்து உடனே வெளியேற வேண்டும் என்ற தங்களின் அறிக்கை மிகவும் தெளிவாக இருந்தது.

சந்திரிகாவின் மாறாத குணத்தை சந்திரகாசன் போன்றவர்களின் மூலமே வெளிப்படுத்த முடியும். ஈழத்தமிழர்களின் ஒரேபாதுகாப்பு உலகத்தில் வாழும் ஒன்றுபட்ட தமிழர்களின் ஆதரவே. அந்த அடிப்படையில் தமிழர்கள் அனைவரும் ஒரே உணர்வோடு கோடிக்கணக்கான ரத்தக் கையெழுத்து மூலம் இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் ஈழத் தமிழரைப் பாதுகாப்பதற்கான கோரிக்கையை அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பிலும் பாரதப்பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட பத்திரிகையாளர் சங்கம் இந்திய அரசு தலையிட்டு உடனே தீர்வுகாண வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளோம்.

தங்கள் நம்பிக்கைக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும். இது உறுதி.

இவண்,
கோ.ப. சின்னப்பா பி.லிட்;
மாவட்டப் பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம்
திருவண்ணாமலை.

சந்திரகாசனின் முதல்பக்க அறிக்கை ஈழத்தமிழர் பிரச்சினையில் உண்மையான தெளிவை ஊட்டுகிற காலத்தின் குரலாக உள்ளது.

1) சந்திரிகா இன்றல்ல, தொடக்கத்திலிருந்தே தமிழர்களுக்கு மட்டுமல்ல, இந்தியத் தமிழர்களுக்கும் எதிராக உள்ளவர்தான் என்பதை ஆதாரத்துடன் நிலைநாட்டியிருப்பது.

2) சந்திரிகாவின் தற்போதையப் போர் புலிகளுக்கு எதிரானதென்பது ஏமாற்று. தமிழ்ப் பொது மக்களுக்கு எதிரானது என்பதே உண்மை என உடைத்துப் போட்டிருப்பது,

3) அவருடைய சமாதான முயற்சி என்பது சிங்கள இனவாத ஒடுக்குமுறையை மறைக்கப்போடும் திரை என்று புலப்படுத்தியிருப்பது,

4) புலிகள் கொரில்லாப்போரில் சமர்த்தர்கள் என்றாலும், ஒரு மரபு சார்ந்த (Convensional) போரில்இராணுவத்திடமிருந்து அவர்களால் தமிழ்மக்களைப் பாதுகாப்பது கடினம் என்று எடுத்துக்காட்டியிருப்பது,

5) எப்படி புலிகளை ஒடுக்குகிறோம் என்று சொல்லிக் கொண்டு சந்திரிகா அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களை அழிக்க முற்பட்டிருப்பது கண்டிக்கத் தக்கதோ, அப்படியே புலிகளும் அரசுடனான சண்டையில் சிங்களப் பொது மக்களைக் கொலை செய்வதும் கண்டிக்கத்தக்கது எனத் தைரியமாகக் கூறியிருப்பது,

6) அதைப்போலவே இந்தியாவில்உள்ள ஆறு கோடித் தமிழர்களைப் பகைத்துக்கொண்டு, ஒரு கோடிச் சிங்களவருக்கு ஆதரவாக இந்தியாவால் செயல்படமுடியாது. அதனால் புலிகளின் ஆதரவாளர்கள் இப்பிரச்சினையில் இந்திய அரசைத் தேவையில்லாமல் சாடுவது சரியல்ல என்று நடுநிலையோடு கூறி, அதே வேளை இந்தியா இப்பிரச்சினையில் தலையிட்டுத் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பது.

இத்தியாதி சிறப்புகளால் சந்திரகாசனின் முதல் பக்க அறிக்கை, இது சம்பந்தமாக வெளிவந்துள்ள அறிக்கைகளிலேயே தலைசிறந்து விளங்குகிறது. பாராட்டுக்கள்!

ஐ.ஆர். காசிநாதன், சென்னை-78.

''குற்றம் பார்க்காமல் கொலையை நிறுத்துக!'' என்ற தலைப்பில் 'ஈழசுதந்திரன்' எழுதியிருந்த ஆசிரியத் தலையங்கம் அருமையானது. அதன் யோசனைகள் போற்றத் தக்கன.

இரா. அரங்கநாதன், வந்தலைக்கூடலூர்.

''இலர் பலராகிய காரணம் நேற்பசர்
பலர் நோலா தவர்''
...வுக்கு 'அருகோ' கூறியிருக்கும் பொருள்

...த. ஞானசிகாமணி, இராணிப்பேட்டை.

# கிளாலி கடலேரியை கடந்து தினமும் 5000 அகதிகள் வன்னி வருகை

யாழ்குடா நாட்டிலிருந்து வன்னிப் பெரு நிலப்பரப்பை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்ற அகதிகளின் எண்ணிக்கை கடந்த ஒரு வார காலத்தின் பின்னர் மீண்டும் அதிகரித்திருக்கிறது.

யாழ்ப்பாணம் நகரை சிவிரெச நடவடிக்கை மூலம் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியதும் குடா நாட்டிலிருந்து கிளி நொச்சிக்கு வருகின்ற அகதிகளின் எண்ணிக்கை கடந்த ஒரு சில நாள்களாக குறைந்திருந்தது.

தற்போது யாழ் குடா நாட்டிலிருந்து மக்கள் மீண்டும் பெருமளவில் இடம் பெயரத் தொடங்கியிருக்கின்றனர்.

கிளாலி கடலேரி ஊடாக தினமும் ஐயாயிரம் பேர் வரை கிளிநொச்சிக்கு வந்து கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குடாநாட்டு மக்கள் பாதுகாப்பு கருதி கிளிநொச்சிக்கு இடம் பெயர்வது உசிதமென அங்கு கேட்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

ஆனால் கிளிநொச்சியில் இருந்து குடாநாட்டுக்குச் செல்வதாயின் கிளாலி கடலேரி ஊடாக வாரத்தில் ஒருநாள் மட்டுமே தற்போது படகு சேவை நடைபெறுகிறது.

கிளாலி படகுத் துறைகளைக்கட்டிக் காணப்படுகிறது. கிளிநொச்சியில் மக்கள் நெருக்கம் அதிகரித்துள்ளது,

இதேவேளை கிளி நொச்சியில் தஞ்சமடைந்த மக்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்பும் நிலைமையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. மூன்று லொறிகளில் மருந்துப் பொருள்களும் கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் தற்காலிக களஞ்சியம் ஒன்றை அமைப்பதற்கான கூடாரமும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரகம் யு. என். எச். சீ. ஆர். மூலம் நேற்று சனிக்கிழமை அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப்படும் உணவு சாராத பொருள்கள் அங்கு களஞ்சியப்படுத்தி வைக்கப் படவுள்ளன.

இது இவ்வாறிருக்க யாழ் நகரில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அதன் அலுவலகத்தை பருத்தி துறைக்கு சில வாரங்களுக்கு முன்னர் மாற்றிவிட்ட போதிலும் யாழ் போதனா வைத்திய சாலையை சுற்றிவர அவ்வமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பத்தோ பஸ்து வலயம் இன்னமும் பேணப்பட்டு வருவதாக கொழும்பில் உள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்க ஐ. சி. ஆர். சி. பிரிவின் உதவித் தலைவரான போல் புரூ தெரிவித்திருக்கிறார்.

யாழ் போதனா வைத்திய சாலையில் பணியாற்ற அவசிய மேற்படுமிடத்து மீண்டும் செல்வதற்கு ஐ.சி.ஆர்.சி. அதிகாரிகள் தயாராகவே இருக்கிறார்கள். யாழ் நகருக்கு சென்று மீண்டும் பணிகளை ஆரம்பிக்க நாம் விரும்புகின்றோம். ஆனால் அதே வேளை பருத்தி துறையில் எமது அலுவலகம் தொடர்ந்தும் இருக்கத் தான் செய்யும். தற்போது குடா நாட்டுக்குள் போக்குவரத்து பாரிய பிரச்சினையாக இருக்கிறது. இராணுவத்தின் கட்டுபாட்டில் உள்ள பகுதிகளுக்கும் புலிகளின் வசம் இருக்கும் பகுதிகளுக்கும் இடையேயான போக்குவரத்து தொடர்ந்தும் சிக்கலானதாகவே எமக்கு இருக்கிறது என்றும் புரூ தெரிவித்தார்.

## வன்னியில் தஞ்சமடைந்த அகதிகள் உணவு நிவாரணத்திற்காக காவல்

யாழ்குடா நாட்டில் இருந்து அகதிகளாக இரண்டு லட்சத்திற்கு மேற்பட்டோர் இதுவரை அகதிகளாக வன்னி பெருநிலப்பரப்பு பகுதிக்கு வந்து சேர்ந்துள்ள போதிலும் கடந்த இருமாத காலத்தில் உணவு நிவாரணப் பொருள்கள் அடங்கிய 19 லொறிகளே அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

வன்னி பகுதியில் அகதிகள் உணவு இன்றி பட்டினியால் வாடுவதாக தெரிவிக்கப் படுகிறது,

கடந்த இருமாத காலப் பகுதியில் எல்லாமாக 391 உணவு லொறிகள் வன்னிக்குச் சென்றுள்ளன. எனினும் 19 லொறிகளில் மட்டுமே அகதிகளுக்கான நிவாரணப் பொருள்கள் சென்றுள்ளன.

கடந்த திங்கட்கிழமை வரை 49,482 குடும்பங்களைச் சேர்ந்த 201344 பேர் வன்னி பெருநிலப்பரப்புக்கு அகதிகளாக வந்து சேர்ந்திருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதி 850குடும்பங்களைச் சேர்ந்த 3,80 8பேர் குடாநாட்டிலிருந்து அகதிகளாக வந்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு,மன்னார் மாவட்டங்களில் தங்கியுள்ள அகதிகள் தங்களு உணவு நிவாரணம் எப்போது சேருமெனத் திகைத்திருக்கின்றனர்.

கிளிநொச்சி பகுதியில் உணவுப்பொருள்களின் விலைகள் வெகுவாக உயர்ந்துள்ளன. ஒரு கிலோ மரக்கறி 100 ருபாவுக்கு விற்கப்படுகின்றது. மீனவர்கள் கடலுக்குச்செல்லாததால் மீன் அடியோடு கிடைப்பதில்லை.

அகதிகள் பலர் ஏதேனும் கூலித் தொழில் செய்ய முடியுமாவெனவும் தேடி அலைகின்றனர்.

'சக்மா அகதிகள்' பற்றிய 'கோரா'வின் செய்திக் கட்டுரையும் அதற்கு ஆசிரியர் கொடுத்திருந்த முன்னுரையும் அகதிகள் பிரச்சினையில் தெளிவு பெறுவதற்கு துணைபுரிந்துள்ளன.

என். இராகவன், மதுராந்தகம்.

ஈழத்தமிழர் மரபு வழித் தாயகத்தை சிங்களர் அபரித்த வரலாறு மறவன் புலவு சச்சிதானந்தத்தால் மறுக்க முடியாத புள்ளி விவரங்களுடன் நறுக்குத் தெறித்ததுபோல விளக்கப் பட்டிருந்தது. இதன் சுருக்கம் 'தினமணி' நாளிதழில் கூட வெளிவந்துள்ளதெனினும் ஈழ சுதந்திரனிலேயே விரிவாகவும் விளக்கமாகவும் இருந்தது.

கே. எஸ். காண்டீபன், வேலூர்-4.

உலகத் தாபனங்களின் சார்பில் வரும் நிபுணராக இருப்பினும் தமிழர் என்றால் சிறீலங்காச் சிங்கள இனவெறி அரசு எப்படித் துவேசத்தோடு நடந்து கொள்கிறது என்பதை ஈழசு தந்திரன்' 6ம் பக்கச் செய்திமூலம் அறிந்து கொண்டேன். இத்தகைய அரசை ஆதரிப்போரும் இனத் துவேசிகளே ஆகும்.

பெ. மணிமாரப்பன், கூடுவாஞ்சேரி

''தமிழ் மக்களின் கல்லறை மீதிருந்து சமாதானம் பேசுவது யாருடன்?'' என்று கேட்டு, 'கேயார்' எழுதியிருக்கும் கட்டுரை காரசாரமானது. பாராட்டும்படி இருந்தது.

மா.அ. தனபாலன், பூவிருந்தவல்லி.

'கென்யா'வைப்பற்றி சீனிவாசன் எழுதியிருந்த சித்திரம் அருமை. உலக நாடுகள் பற்றி இன்னும் தெளிவாகவும் சரியாகவும் செய்திகளைத் தந்தால், அது 'ஈழசுதந்திரன்' வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளப் பெரிதும் துணை செய்வதாக இருக்கும்.

[illegible]

# கொட்டப்பட்டு அகதி முகாமில் உண்ணாநோன்பு

## தமிழகப் பிரமுகர்களும் பங்கேற்பு

திருச்சியில் உள்ள கொட்டப்பட்டு அகதிகள் முகாமில் உள்ள மக்கள் குழுவினரால் காலை 8 மணிக்கு ஈழத்தில் நடக்கும் தமிழினப் படுகொலையை கண்டித்து. முகாமில் உள்ள மக்களில் ஆண்கள் 400பேரும், பெண்களில் 350 பேரும், இளைஞர் இளம் பெண்கள் சிறுவர்கள் உட்பட 250 பேரும் கலந்து கொள்ள அந்த உண்ணாவிரதத்தை தமிழகத்தை சேர்ந்தபெரியவர்கள் புலவர் மரியதாஸ் எம்.ஏ. அவர்களும்புலவர் நமச்சிவாயம் எம்,ஏ அவர்களும் ஹோமியோ மருத்துவர் ராஜகோபாலன் அவர்களும், சிறப்பு தனித் துணை ஆட்சியர் அவர்களும் விருந்தினராகக் கலந்து கொண்டு உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தனர்.

அப்பொழுது அவர்கள் பேசிய வாழ்த்துரைகள் வருமாறு:

அ. புலவர் நமசிவாயம் தமிழீழத்தில் நடக்கும் இன அழிப்பு போரைக் கண்டித்தும் இப்போர் தொடர்ந்தும் நடக்காமலும் உடனடியாக நிறுத்தி விட்டு இருதரப்பினரும் உடனடியாக பேச்சுவார்த்தைநடத்த முன்வர வேண்டும் என்று தமிழக மக்களின் சார்பில் கேட்டுக்கொள்வதாகப் பேசினார்.

ஆ. மருத்துவர் கோபாலன் ஈழத்தில் நடக்கும் போராட்டத்தை கண்டித்தும் தமிழகத்தில்வாழும் அத்தனை மக்களும் தங்களுடைய தார்மீக ஆதரவை எப்பொழுதும் கொடுப்பார்கள் என்றும் உறுதியளித்தார்.

இ. புலவர் மரியதாஸ் இலங்கையில் தோட்டத் தொழிலாளர் தொடக்கம் தமிழீழ மக்கள் வரை காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வரும் சிங்கள இன வெறியர்களால் பல வழிகளிலும் தமிழ்மக்கள் துன்புறுத்தப்படுவது நிறுத்தப் வேண்டும். இதை இவ் இன அழிப்பு போரை மத்திய அரசு சர்வதேச அரங்கிற்கு எடுத்து செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஈ. அடுத்து முகாமைச் சேர்ந்தபோதகர்ஜான், இலவச கண் சிகிச்சை முகாம் அமைப்பாளர் மாரிமுத்து தமிழ் மக்களுடைய துன்பத்துக்கு ஒரு விடிவு ஏற்பட ஜபம் செய்து ஒரு யூத ராஜாராணி கதையை சொல்லி பிரார்த்தனை செய்தார்.

உ. முகாமை சேர்ந்த தங்கமணி அம்மையார் தமிழ்த் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை வீட்டிலும், மருத்துவமனையிலும் பெற்றுச் சீராட்டினார்கள். ஆனால் தற்சமயம் வீதியிலும், கண்ட கண்ட இடத்திலும் பிரசவித்து வேதனையிலும் சோதனையாக குழந்தைகளுக்கு பால்மாவுக்கு வழியில்லை. நல்ல போசாக்கான உணவுக்கு கஷ்டப படுகிறார்கள். இந்த நிலை தொடர வேண்டுமா என்று மிகுந்த ஆதங்கத்துடன் பேசினார்.

ஊ. திருமதி அலோசியஸ் ஈழத்தில் நடந்த பல போராட்டங்களில் தந்தை செல்வா அவர்களுடன் கலந்து கொண்டதாகவும் இப்பொழுது இங்கு நடக்கும் போராட்டத்தில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் தந்தை செல்வா கண்ட மாநில சுயாட்சி அமைய இறைவனை பிரார்த்திப்பதாகவும் வேண்டிக் கொண்டார்.

எ. முகாமைச் சேர்ந்த அழகு சுந்தரம் : ஈழத்தில் நடக்கும் போராட்டத்தை உலகமக்கள் அறிய சகல தமிழ்மக்களிடம் கையெழுத்து வாங்கி மத்திய அரசுக்கும், ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பவேண்டும் என்றார்.

ஏ. முகாமைச் சேர்ந்த மக்கள் மருத்துவக் குழுவை சேர்ந்த திருமதி. சந்திரபோஸ் ஹேமா, ஈ.எ.ம.க. சேர்ந்த மல்லிகா, மஞ்சு, முகாமை சேர்ந்த அண்ணாமலை, வடிவேலு, குமார் நல்ல உணர்ச்சிகரமான கவிதைகள், கதைகள் புனைந்து மக்கள் மத்தியில் உணர்வுகளை ஊட்டினார்கள்.

ஐ. சரியாக ஐந்து மணிக்கு நன்றி உரையுடன் கிருஷ்ணா சைக்கிள் கடை உரிமையாளர் வழங்கிய குளிர் பானத்துடன் உண்ணாவிரதம் இனிதே முடிவடைந்தது.

## தாண்டிக்குளத்தில் வைத்தே பயணிகள் விசாரணை

வடக்கில் இருந்து வவுனியா வருவோரை சோதனையிடுவதில் கடைபிடிக்கப்பட்டு வந்த நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முன்னர் நொச்சிமோட்டையில் வைத்து வடபகுதி பயணிகளை சோதனை செய்யும் இராணுவத்தினர் அதன் பின்னர் பிரவுன் கம்பனி கட்டிடத்தில் வைத்தே விசாரணைகளை நடத்தி 'பாஸ்' வழங்கி வந்தனர்.

தற்போது வடக்கிலிருந்து வருவோரை நொச்சிமோட்டையில் வைத்து சோதனை செய்யும் படையினர் தாண்டிக்குளத்திற்கு பயணிகளை ஏற்றி வருகின்றனர். தாண்டிக்குளம் பாடசாலைக்கட்டிடத்தில் பயணிகள் விசாரணை செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டதும் பஸ்ஸில் தற்காலிக முகாமுக்கு ஏற்றி வரப்படுகின்றனர்.

தற்காலிக முகாமில் வைத்தே பயணிகள் எந்த தரப்பினர் என விசாரிக்கப்படுகின்றனர். வடக்கிலிருந்து வந்தோர் அகதிகளா அல்லது கொழும்புக்குச்செல்ல வேண்டியவர்களா என்றெல்லாம் இங்கு வைத்தே அறியப்படும். இத்தகைய சோதனைகள், விசாரணைகள் யாவும் முடிவுற்ற பின்னரே வடக்கிலிருந்து வருவோருக்கு 'பாஸ்' வழங்கும் ஏற்பாடு செய்யப்படும்.

5-ம் பக்தி தொடர்ச்சி

வினர், மற்றும் இனத்தைக் காக்க ஒன்றிணைந்த தமிழகமே எங்கள் நன்றிகள்'' ''சத்தியம் ஒரு நாள் நிச்சயம் வெல்லும்'' ''இந்திய மத்திய அரசே இலங்கையில் அழிக்கப்படும் எமது இனத்தைக் காப்பாற்றமாட்டாயா?'' என்ற துண்டுப்பதாகைகளும் காணப்பட்டன!

தகவல் :
K.S. காளிமுத்து,
செல்வி: R. ரொசெட்டா
இலங்கை அகதி முகாம்
கண்டியாபுரம்
வெம்பக்கோட்டை

# இந்திய மக்களே எம்மைப் பாருங்கள்

கவிதை ஒன்று இயற்றி வந்தேன்
கண்ணீரோடு கூற வந்தேன்
காரணம் தான் என்னவென்று
காதினிலே கேட்டிடுவீர்
கருணைதனைக் காட்டிடுவீர்
என்ன சொல்லப் போகின்றாய் என
எண்ணுகின்ற உள்ளங்களே
ஏற்றிடுவீர் என் கருத்தை
இரங்கிடுவீர் எம் மக்களுக்காக

ஈழத்தில் போர் என்று இந்தியா வந்துவிட்டோம்
இந்தியா வந்த போதும் ஏக்கங்கள் தீரவில்லை
ஏனிந்தக் கொடுமை என்று இன்னும்தான் தெரியவில்லை
கல்விகற்க வழி இல்லை கற்பனைதான் எங்கள் வாழ்க்கை

வெளியில் செல்ல உரிமை இல்லை
வேலிகள் தான் எம்மைச் சுற்றி
வேலிதாண்டிச் சென்றிடினும் வேண்டாத பேச்சுக்கள்
விழுகின்றன எம் காதில் வேல் போல

அகதி என்ற முத்திரையை அடுக்குகின்றார் எம்மீது
அடிமை என்றே எண்ணுகின்றார்
அடிபணியச் செய்கின்றார்
அவனியில் நடக்கும் தவறுகள் யாவும்
அகதி என்றே சாடுகின்றார்
அணைத்திடுவீர் எங்களையும் அகதி என்ற சொல்லை நீக்கி
ஏற்றுடுவீர் என் கருத்தை இரங்கிடுவீர் எமக்காக

எஸ். சுமதி
இலங்கை அகதி முகாம்,
இராயனூர், கரூர்.

# ஓ! ஈழத்தமிழினமே...

ஈழத் தமிழினமே
உன் ஈர விழிகளைச் சற்றே திறந்து
விழியருகே இருக்கும் விடியலைக் காணாயோ!
கறுத்தவானம் இன்றுமுதல் வெளுத்துப்போகும்
மூடும் பணித்திரை விலகிப் போகும்
நிம்மதி என்ற நிழலும் சூழும்
அமைதியென்ற அலையும் மோதும்
சிங்கள இனவெறிக் கூட்டமே-உன்
சிரசைக் காக்க ஓட்டம் எடுப்பாய்
தமிழா! நீயும் பெருமிதம் கொள்வாய்
ஈழம் என்ற இனிய தேசம் கண்டு
ஓ! தமிழினமே நீயும் தலைநிமிர்ந்து
வெற்றிநடை போடு!

செ. சக்திராஜன், (ஈழவன்)
திருச்சி-1.

# தமிழகமக்களுக்கு இலங்கை அகதி மக்களின் நன்றி!

கடந்த 1983ல் இலங்கையில் தமிழ் மக்கள் மனிதாபிமான மற்ற முறையில் அழித்து ஒழிக்கப்பட்ட பொழுது தமிழக இளைஞர்கள் தீக்குளித்து தமது எதிர்ப்புகளைக் காட்டிய வேளையில் அன்றைய முதலமைச்சர் எம்.ஜி ஆர். அவர்கள் அனைத்துக் கட்சிகள், அமைப்புகள் இன்னோரன்ன சேவைகளை ஒருங்கிணைத்து முழுத் தமிழகமும் ஸ்தம்பிதம் அடையச் செய்ததன் மூலம் இந்திய மத்திய அரசை இலங்கைப் பிரச்சினையில் தலையிட வைத்தார்.

அதற்குப்பின் கடந்த 30-11-1995 அன்று தற்பொழுது இலங்கையில் மீண்டும் ஏற்பட்டுள்ள தமிழருக்கு எதிரான படுபாதகங்களை நிறுத்தக்கோரி தமிழக அரசு, அரசியல் கட்சிகள், தனிப்பட்ட அமைப்புகள், திரைப்பட உலகம், தொழில் அதிபர்கள் உள்ளிட்ட சகல தமிழ் மக்களும் மீண்டும்ஒருங்கிணைந்து ஒரு நாள் 'முழு அடைப்பு' ... தமிழர்களிடம் தங்களுக்கு உள்ள பாசப் பிணைப்பினைக் காட்டி உள்ளனர்!

இவர்களுடன் இணைந்து காமராசர் மாவட்ட வெம்பக்கோட்டை இலங்கை அகதிகளும் இலங்கையில் அழிக்கப்படும் தமது உற்றார், உறவினர், இனத்திற்காக முழுமையாகப் பங்காற்றினார்கள் வெம்பக்கோட்டை முகாமில் தமிழக முதல்மைச்சர், தி.மு.க. ம.ம.தி.மு.க, அ.இ. அ.தி.மு.க.,எம் ஜி.ஆர். அதி.மு.க, பா.ம.கட்சி, திராவிடர் கழகம், ஜனதா தளம், கலைத்துறை, சிவசேனா, தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் மேலும் பல்வேறு அமைப்புகளாலும் விடப்பட்ட பத்திரிகை அறிக்கைகள் மற்றும் பாராளுமன்றத்தில் பல்வேறு கட்சிகளின் சார்பிலும் இலங்கைத்தமிழர் நிலை பற்றி கூறப்பட்ட தகவல்களும் ஒட்டப்பட்டிருந்தன!

அத்துடன் முகாம் அகதிகள் சார்பில் ''இலங்கையில் அரசுப்படைகளினால் அழிக்கப்படும் எமது உற்றார், உற...


## "ஈழசுதந்திரன்" மாத இதழ் சந்தா விவரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழசுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம் :

நிர்வாகி
"ஈழசுதந்திரன்"
14, சேட் காலனி முதல் தெரு,
மூன்றாம் மாடி.
எழும்பூர், சென்னை-600 008.

www.padippakam.com






## ஆப்பிழுத்த குரங்கு கதை

என்னடா தம்பி, இப்ப உங்களுக்கெல்லாம் சந்தோஷம் தானே.

என்ன சுப்பையாண்ணை வந்ததும் வராததுமாய் என்ன சந்தோஷம் என்கிறியள்.

நீதான் போனமுறை கேட்டனீ யாழ்ப்பாணத்தைப் புடிச்சுப் போடுவாங்களோ எண்டு!

அதுதான் சொல்லுறன். புடிச்சுட்டாங்கள் பார்த்தியே.

அண்ணை நான் தமாசாக் கேட்டால் நீங்கள் சீரியஸாக எடுத்துப் போட்டியள்.

சரி அதை விடுங்கோ இப்ப அங்கை என்னதான் நடக்குது?

யாழ்ப்பாணத்தைப் புடிச்சி இத்தனை நாளாய் போயிட்டுது.

அங்கை ஆரிருக்கினம், என்ன நடக்குது எண்டு ஆருக்குத் தெரியும் தம்பி.

சண்டை நடக்கேக்கதான் பேப்பர்க்காரரை விட மாட்டினம் எண்டவை, இப்பவும் விட மாட்டன் என்று சொல்லுறதுதான் ஏன் எண்டு விளங்கேல்லை.

சிவில் நிர்வாகம் செய்யப் போறம் எண்டு சொல்லியினம், புலிகளை, விரட்டியாச்சு எண்டு சொல்லியினம். கோட்டையில் சிங்கக் கொடியும் ஏத்திப் போட்டினம் எண்டு சொல்லினம்.

யாழ்ப்பாணத்தில என்ன நடந்தது எண்டு மட்டும் சொல்ல மாட்டினமாம்.

தம்பி அவையள்ளையும் ஏதோ களவு இருக்கிற படியால் தான் எந்தசெய்திகளையும்வெளியிலவிட பயப்படியினம். பேப்பர்க்காரரை உள்ள விட்டால் பொய் எல்லாம் அம்பலமாயிடும் எண்டு தான் பேப்பர்காரரையும் உள்ள விடமாட்டினமாம்.

என்னமோ ஏதோ எண்டு ஒரு வேகத்தில யாழ்ப்பாணத்தை பிடிச்சிப் போட்டினம்.

ஆனால் பிடிச்ச இடத்தை, வச்சிருக்கிறது எப்படி? என்றும், மக்களை திரும்பவும் யாழ்ப்பாணத்துக்கு எப்படி அழைக்கிறதென்றும் தெரியாமல் இராணுவம் திண்டாடும் அதே வேளை, பிடிச்ச இடத்தை தக்க வைக்க முடியாமலும், விட முடியாமலும் ஆப்பிழுத்த குரங்கு கதை மாதிரி இராணுவத்தினர் கதை இருக்கு பாருங்கோ,

இது இப்பிடியே இருக்க பாதிக்கப்பட்டு அகதியாக ஓடிப் போன பொடியன் பொட்டையள் எல்லாம் இனி தாங்கள் யாழ்ப்பாணம் போகேலாது என்ற நிலையில்புலிப்படையில் சேர்ந்து கொண்டும் இருக்கினமாம். இதேவேளை சரியான நேரத்துக்கு சாப்பாடோ, மருந்தோ இல்லாமல் ஏராளமான குழந்தைகளும், தாய்மார்களும் சரியாய்க் கஸ்ரப்படுகினமாம்.

தம்பி இராணுவம் என்கிற ஒரு அரசாங்கத்தின் படை பலம் கண்டியோ.

அது தான் நினைத்த எதையும் செய்யலாம்.

ஆனால் செயல் விளைவு என்ன என்றதை யோசிக்கும் போதுதான்கஸ்டமாய் இருக்கும்.

இப்ப யாழ்ப்பாணத்தைப் பிடிச்சவை வடக்கு கிழக்கு முழுவதையும் பிடிக்கலாம். ஆனால் [illegible]னால் என்ன பலன் என் யோசிக்க மறந்து போட்

# சண்டைக் கிடா சந்திரிகாவின் சமாதான வேடம் கலைகின்றது!

**-: கேயார் :-**

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கடந்த மாதம் ஒரு திருப்பு முனையாக அமைந்ததாகவும், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி சிங்க(ளக்) கொடியைப்பறக்க விட்டதன் மூலமும், விடுதலைப்புலிகளை யாழ்ப்பாணத்தை விட்டு விரட்டியடித்து விட்டதன் மூலம் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க பெரும் சாதனை படைத்து விட்டார் எனவும், உலகுக்கும் சிங்கள மக்களுக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு.

சொந்த நாட்டிலேயே, சொந்த நாட்டு மக்கள் மீது விமானங்களாலும், கடற்பீரங்கிகளாலும் ஆட்றறி 'ஷெல்' கள் மூலமாகவும் தாக்குதல்களை நடத்தி அவர்களது உடல்கள் மீது இராணுவ டாங்குகளை ஓட்டி, தமிழ் மக்களின் சொத்துக்களையே அழித்து, யாழ் கோட்டையை கைப்பற்றி சிங்(கள)க் கொடியை பறக்க விட்டதன் மூலம் இராணுவம் இனிமேல் என்ன செய்யப் போகிறது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்களை சொந்த இடங்களை விட்டு விரட்டியடித்ததன் மூலம், அவர்களுக்குரிய உணவு, மருந்து மற்று பிற தேவைகளுக்குரிய பொருட்களை அந்த மக்களுக்கு சென்றடையாமல் பாதுகாத்துக் கொண்டதன் மூலம் அவர்களை மனம் வருந்தச் செய்து சாவடித்ததன் மூலம் கிடைத்த வெற்றிதான் சிங்களக் கொடியேற்றமா எனக் கேட்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டு விட்டது. அங்கு சிங்க(ளக்) கொடியேற்றப்பட்டு விட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய தமிழர்கள் மீண்டும் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பலாம், என்றும் இலங்கை அரசு அறிவித்துள்ளது.

பத்திரிகையாளர்களையே உள்ளேவிடமறுக்கும் அரசாங்கத்தின் பேச்சை நம்பி எவர்தான் யாழ்ப்பாணம் போகத் துணிவார்கள்? இதேவேளை தற்போது பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் தனது பணியாளர்களுடன் பருத்தித்துறையில் பணியாற்றி வருகிறது.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியைச் சூழவுள்ள பகுதி நற்போதும் பாதுகாப்பு வலயமாக பேணப்பட்டு வருவதாகவும் எனவே பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை மீளவும் இயங்கச் செய்ய முடியும் எனவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது.

அசுர வேகத்தில் கைப்பற்றிய யாழ்ப்பாணம் மீண்டும் பறி போவதற்குள் எப்பாடு பட்டாவது யாழ்ப்பாணத்துக்குள் மக்களை கவர்ந்திழுக்கும் நடவடிக்கையின் முதற் கட்டமே இந்த அறிக்கையாகும்.

அது மாத்திரமல்லாமல், யாழ்ப்பாணத்துக்கு மிக விரைவில் மின்சாரம் வழங்கப்படும் என்றும், உள்ளூர் போக்குவரத்துகள் துரிதப்படுத்தப்படும் என்றும் அரசு அறிவித்த கையோடு வங்கிகள் மூலமாக பணம், மற்றும் ஒய்வூதியம் பெற்று வந்தவர்கள் தங்களது சொந்த இடத்துகு வந்தே இவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் இராணுவ (இலங்கை) அரசு அறிவித்துள்ளது.

ஆக மொத்தத்தில் ஆயுதப் போராட்டம் மூலம் வெறும் நிலப்பரப்பை வென்றெடுத்தாக கூறும் அரசு, மக்களை வென்றெடுப்பதில் பெரும் தோல்வி அடைந்த நிலையில் இவ்வாறான கையாலாகாத்தனமான செயற்பாடுகள் மூலமாக மக்களை தங்கள் பாசறைக்குள் கொண்டு சென்று விடலாம் எனக் கனவு காண்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருப்பவர்கள் அனைவருமே விடுதலைப் புலிகள் என சிங்கள அரசால் முத்திரை குத்தப் பட்டதன் பிற்பாடு கூட எவ்வாறு அவர்கள் அங்கு செல்ல முடியும்?

இராணுவம் தான் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கை மூலம் ஆயிரக்கணக்கான விடுதலைப் புலிகளை கொன்றொழித்ததாக தொக்கரிக்கும் போதும், பல்லாயிரக்கணக்கான மக்கள் விடுதலைப் புலிகளை நோக்கிச் சென்று விட்டதையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சமாதானமாகப் பேச வேண்டிய பல காரியங்களை— செயல்பாடுகளை விடுதலைப் புலிகள் மீறினார்கள் என குற்றம் சாட்டிக் கொண்டே இலங்கை அரசின் இராணுவம் அப்பட்டமாக அந்தக் காரியங்களை செய்து முடித்துள்ளது.

யாழ்ப்பாணத்தை விட்டு இராணுவம் அகலும் வரை சமாதானத்துக்கான கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருக்கும் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இது அரசாங்கத்துக்கு பெருத்த சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தாலும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளை தவிர்த்துக் காணப்படும் சமாதானமும் நடைமுறைப்படுத்தப்படுமா என்ற சந்தேகமும் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

முன்னோக்கிப் போக வேண்டிய பேச்சுவார்த்தையின் முன்னேற்றங்கள் தற்போது மேலும் பின்னோக்கிச் சென்றுள்ளதற்கு சந்திரிகா அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழர்கள் தனது நாட்டுப் பிரஜைகள். அவர்களுக்கு தேவையான சுயாட்சி முறைகளை நியாயமான முறையில் வழங்க வேண்டும் என இலங்கை ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க நினைத்தால் தமிழர் பகுதியில் இருந்து இராணுவத்தினரை விலக்கிக்கொள்ள வேண்டும்.

அல்லது தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாய் இருந்தால் அது தமிழர்கள் அனைவரையும் அழித்தொழித்து விட்டு அவர்களது இடங்களில் சிங்களக் குடியேற்றங்களை நடத்துவதற்கு சந்திரிகா திட்டமிடுகிறார் என்ற பேச்சு ஊர்ஜிதமாகக் கூடும்.

அதன் பின்னர் ஏற்படும் விளைவுகள் நினைத்துப் பார்க்க முடியுமா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

தமிழர்கள் ஒருவர் அல்ல. இருவர் அல்ல. இலட்சக் கணக்கானவர்கள். இவர்களுடன் பூனை-எலி விளையாட்டுக்கு இது உகந்த நேரமல்ல உடனடியாக சண்டையைக் கைவிட்டு தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண முற்படுவதே சிறந்த வழியாகும்.

இல்லையேல் அழிபாடுகளும், அழிவுகளும் தினமும் தொடருவதைத் தான் நாம் பார்க்கப் போகிறோமா?

1996ம் ஆண்டே பதில் கூறட்டும்?

---

# தமிழர் கைது விவகாரத்தில் நீதி எங்கே? நியாயம் எங்கே?

*சபையில் தேவராஜ் எம்.பி. கேள்வி*

பெருந்தொகையானோர் கைதாவதும் அவர்கள் நடத்தப்படும் விதமும், பிணையில் வெளியில் விடும் நடைமுறைகளையும் பார்த்தால் இங்கு ஏதாவது நீதி நியாயமுண்டா? என்றே கேட்கத் தோன்றுகிறது என்று கொழும்பு மாவட்ட இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர் பி.பி. தேவராஜ் சபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சின் ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்படுகின்றனர். அந்தச் சிறைக் கூடங்களில் போதைவஸ்து பாவனையாளர் மற்றும் பல குற்றவாளிகளும் உள்ளனர். இவர்களின் இம்சைக்கு கைதாவோர் ஆளாகும்நிலைஉள்ளது. அடித்துத் துன்புறுத்தல், பார்க்க வருவோர் கொண்டு வரும் உணவினை எடுத்துச் சாப்பிடுதல், சிகரெட் வாங்கி வருமாறு பணித்தல் போன்ற இம்சைகளும் இடம் பெறுகின்றன.

கைது செய்யப்படுவோரில் மதிப்புள்ள, கண்ணியமானோருமுள்ளனர். ஆகவே, இவ்வாறு கைதாவோரை ஏனைய குற்றவாளிகளுடன் ஒன்றாக சிறையில் வைத்திராமல் தனித்தனியாக வைத்திருக்க வேண்டும்.

தொழில் பிணக்குகளிற்கு துரித கதியில் தீர்வு காண்பது அவசியமாகும். கைத்தொழில் அந்தஸ்தைப் பெறவும் உற்பத்தித் துறையை அதிகரிக்கவும் விரும்பும் நாம் தொழிலாளர் பிணக்குகளுக்குத் துரித தீர்வு காண்பது இன்றியமையாததாகும்.

நீதிமன்றங்களின் உரை பெயர்ப்பாளர்கள் பிரச்சினை பாரியதாக உள்ளது.

பல்கலைக்கழகங்களில்உரை பெயர்ப்பாளருக்கான டிப்ளமோ பயிற்சி நெறியை ஆரம்பித்தால் என்ன? பாராளுமன்றத்தில் உரைபெயர்ப்பாளர்கள் உன்னதமான வகையில் சேவை புரிகின்றனர். நீதிமன்றங்களிலும் அத்தகைய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படுவது வரவேற்கத் தக்கதாகும். அதே சமயம் வாக்காளரைப் பதிவு செய்தல் தொடர்பான அநீதிக[illegible] களையப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கை அகதி மாணவர்களுக்கு
ஓர் அரியவாய்ப்பு :

அமரர் தி க. இராசசேகரன் எம்.ஏ. அவர்கள்

# நினைவு கணிதப் புலமைப் பரிசு

1) 10-வது ஆண்டு மற்றும் 12-வது ஆண்டுப் பொதுத் தேர்வு எழுதத் தமிழகப் பள்ளிகளில் படிக்கும் இலங்கை அகதி மாணவர்கள் அகதி முகாங்களில் தங்கியுள்ளோர் கணிதப் பாடத்தில் 1995-ஆம் ஆண்டு-காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களின் கூட்டுத் தொகை கணக்கிடப்பட்டு, அதிக மதிப்பெண்கள் பெற்றிருப்போருக்கு 10-வது ஆண்டு அகதி மாணவர்களுக்குத் தனியாகவும், 12-வது ஆண்டு அகதி மாணவர்களுக்குத் தனியாகவும் கணிதப்புலமைப் பரிசுகள் வழங்கப் படவுள்ளன.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு...... | ரூபா | 1000/- |
| இரண்டாம் பரிசு | ரூபா | 800/- |
| மூன்றாம் பரிசு | ரூபா | 600/- |

* இவர்களில் 60 விழுக்காட்டுக்கு குறையாமல் கணித பாடத்தில் மதிப்பெண் பெற்றிருக்கும் மேலும் 25 அகதி மாணவர்களுக்கு ஆறுதல் பரிசு தலா..... ரூபா 500/-ம் வழங்கப்படவுள்ளன.

2) * முகாமிற்கு வெளியில் வதியும் இலங்கை அகதி மாணவர்களுக்கும், அதே போன்று கணிதப் பாடத்தில் காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற, 10-வது, மற்றும் 12-வது ஆண்டு அகதி மாணவர்களுக்கு வேறு வேறாக பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு......... | ரூபா | 1000/- |
| இரண்டாம் பரிசு...... | ரூபா | 800/- |
| மூன்றாம் பரிசு...... | ரூபா | 600/- |

* இவர்களில் 60 விழுக்காட்டுக்குக் குறையாமல் மதிப்பெண் பெற்றிருக்கும் 5 பேருக்கு ஆறுதல் பரிசு தலா... ரூபா 500/ வழங்கப்பெறும்.

* இப்பரிசுத் தொகைகள் அவர்கள் முழு ஆண்டுத் தேர்வுக்கான தயாரிப்புக்கு உதவிடும் வகையில் 1996-தை மாத இறுதியில் வழங்கப்பெறும் பரிசு பெற விரும்பும் 10-வது, மற்றும் 12-வது ஆண்டு அகதி மாணவர்கள் தங்கள் 1995 காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுகளில் கணிதப் பாடத்திற்குப் பெற்ற புள்ளிகளை பள்ளித் தலைமை ஆசிரியரின் சான்றிதழுடன் 1996 பொங்கலுக்கு முன் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டும்.

* திருகோணமலை கனகசுந்தரம், இராஜசேகரன் என்னும் இந்த கணித மேதை ஈழம் தந்த கல்வியாளர்களில் குறிப்பிடத்தக்கவராவார். சென்னை கிருத்துவக் கல்லூரியில் கணித விரிவுரையாளராகவும், யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரியில் துணை முதல்வராகவும் இருந்து இந்தியாவிலும் இலங்கையிலும் ஒருங்கே கல்வித் தொண்டாற்றிய அறிஞர்.

ஈழத் தந்தை செல்வாவின் நெருங்கிய உறவினரான இவர், தூய்மையான காந்தியவாதி, எப்போதும் தூய கதராடையே அணிவார். இந்திய சுதேசிய இயக்கத்திலும் தீவிர பங்கு கொண்டவர். இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தில் பெரும் பங்காற்றியவர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியிலும், தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்து தமிழின ஒற்றுமைக்கும், உரிமைக்கும் பாடுபட்டவர்.

தந்தை செல்வா தலைமையில் நடைபெற்ற சரித்திர முக்கியத்துவம் பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டங்களில் எல்லாம் பங்குபற்றியதுடன், அவருடன் தடுப்புக் காவலில் சிறையிருந்த தமிழ்த் தியாகியுமானவர்.

* அன்னார்பெயரால் நிறுவப்பட்டிருக்கும் இப்புலமைப் பரிசுத் திட்டத்தில் பங்கு கொண்டு அகதி மாணவர்கள் பயன்பெற முந்துங்கள்.

* கணிதத் தேர்ச்சியே மனிதனின் உயர்ச்சி.
* கல்விக்குழுந்து, அதுவே பெற்ற நாட்டையும், பெருமைக்குரிய இனத்தையும் கரை சேர்க்கும் உந்து.

தொடர்புக்கு :- கல்விக்குழு
ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம,
14 சேட் குடியிருப்பு, முதல் தெரு,
சென்னை - 8.

# அரசியல் தீர்வு நடவடிக்கையை தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும்

–தமிழீழ விடுதலைக் கழகம்

சூரிய கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் யாழ் நகர் கைப்பற்றப்பட்ட வெற்றிக்காக யாழ். நகரிலும் ஜனாதிபதி செயலகத்திலும் இடம் பெற்ற வைபவங்கள் தமிழ் மக்களுக்கு மிகுந்த வேதனை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை வழங்கி முழுமையான சமாதானத்தை கொண்டுவரும் போதுதான் அரசின் மீது தமிழ் மக்களுக்கு முழு நம்பிக்கை ஏற்படும் என தமிழீழ விடுதலைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வமைப்பின் உபதலைவர் தா. மாணிக்கதாசன் விடுத்துள்ள இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

யாழ். நகரில் இராணுவ வீரர்கள் மத்தியில் ஏற்றப்பட்ட தேசியக் கொடி ஏற்கனவே குடா நாட்டு இராணுவ முகாம்களில் அதே இராணுவ வீரர்கள் மத்தியில் பறந்து கொண்டிருந்த கொடியேயாகும். இக்கொடியினைப் பறக்க விடுவதற்காக 18 கிலோ மீற்றர் வரை 49 நாட்களாக நகர்ந்து 3 இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்களை அதிகளாக்கி நூற்றுக்கணக்கில் படுகொலை செய்து அங்கவீனர்களாக்கி கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டு, பல நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்களை பலி கொடுத்தும் உள்ள இவ் இராணுவ நகர்வு வெறும் நிலப்பரப்பை மட்டும் மீட்டெடுத்த நடவடிக்கையாக அமைகிறது.

முடிவுற்ற இராணுவ நடவடிக்கை மூலம் இந்நாட்டு இராணுவத்திற்கோ சிங்கள மக்களுக்கோ வெற்றிகிடைத்து விட்டதென்றோ அல்லது தமிழ் மக்களது உரிமைப் போராட்டம் வெற்றிகொள்ளப் பட்டுவிட்டதென்றோ கருத முடியாது. பாசிசம் பலவீனப் பட்டிருந்தாலும் கூட, தமிழ் மக்களை தமது அடிப்படை உரிமைகளுக்காகவும் சுதந்திரமான வாழ்வுக்காகவும் போராட நிர்ப்பந்தித்த அரசியல் காரணங்கள் இன்னமும் நீக்கப்படவில்லை என்பதை அரசு புரிந்துகொண்டு அக்காரணங்களை நீக்கும் அரசியல் தீர்வு நடவடிக்கைகளை காலதாமதமின்றி ஆரம்பிக்க முன்வரவேண்டும்.

# தமிழ் மக்களுக்கு பலத்த ஏமாற்றம் அவர்களை பாதுகாக்க இன்று எவருமில்லை

முன்னாள் சபாநாயகர் முகமத் விசனம்

தமிழ் மக்கள் இன்று மிகவும் ஏமாற்றத்திற்குட்பட்டுள்ளனர். அவர்களை பாதுகாப்பவர்கள் எவருமில்லை. நீங்கள் தமிழ், முஸ்லிம் பெயர் உடையவர்களாயின் உங்களுக்கு காணியும் கிடையாது. இதுதான் இன்றைய நிலை என முன்னாள் சபாநாயகரும் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. எம்.பி.யுமான எம். எச். முகமத்செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் விசனம் தெரிவித்தார்.

பாராளுமன்ற விவகார, பெருந்தோட்ட கைத்தொழில் துறை, உள்ளூராட்சி, பொது நிர்வாக அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நான் இனவாதம் பேசும் இனவாதியல்ல, என் வாழ்க்கையில் ஒருபோதும் அவ்வாறு இருந்ததில்லை. 1965 தொடக்கம் சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றேன் எனவும் குறிப்பிட்டார்.

அவர் தமதுரையில்மேலும் தெரிவித்ததாவது:-

மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே தோட்டத் தொழிலாளர்கள் இன்று நடத்தப்படுகின்றனர். சம்பள உயர்வு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. தமிழ், முஸ்லிம் பெயருடையவராயின்பொலீஸ் நிலையம் கொண்டு செல்லப்படுகின்றனர்.

எனது மகளின் வீட்டிற்கு நள்ளிரவில் சோதனையிட வந்த பொலீஸார் இராமசாமி எனும் ஹற்றனைச் சேர்ந்த ஊழியரை 'சேர்ட்டைப் போட்டுக்கொண்டு வா' என கட்டளையிட்டுள்ளனர். அப்பணியாளர் எனதுகுடும்பத்தில் 20 வருடமாகப் பணியாற்றி வருபவர். சகலரும் மனிதர்கள் எனச் செயற்பட வேண்டும்.

# இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு நியூசிலாந்து வாசி. ஆனால் தமிழர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் என்ஜினியராக முன்னர் பலகாலம் கடமையாற்றியவர். பல உயர் அதிகாரிகளின் நன்மதிப்பையும் பெற்றவர்.

வெளிநாட்டில் வேலை கிடைத்தால் என்ஜினியர் பதவியை விட்டு விலகி நியூசிலாந்து சென்று அங்கு இதே துறையில் இப்பொழுது பணிபுரிகிறார். அண்மையில் இவர் விடுமுறையில் கொழும்பு வந்திருந்தார்.

வந்த இடத்தில் தமது பழைய நண்பர்களைப் பார்ப்பதற்காக ஒருநாள் சாயங்காலம் கூட்டுத்தாபனத்துக்கு சென்றிருந்தார். அங்கு வாசலில் கடமையில் இருந்தவர் இவருக்கு அறிமுகமானவர் என்பதால் வழமையான நுழைவுப் பதிவுகளை முடித்துவிட்டு உள்ளே செல்ல இன்முகம் காட்டி அனுமதி கொடுத்தார்.

அவரும் பழைய நினைவுகளை மீட்கும் முகமாக உள்ளே சென்று நண்பர்களை சந்தித்து பேசினார்.

இதேவேளை அங்கே பாதுகாப்பு கடமையிலிருந்த மற்றொருவர் 'கொட்டியா அத்துலட்ட அவில்லா' என்று நைசாக மேலிடத்துக்கு வத்தி வைத்துவிட்டார். கேட்கவா வேண்டும். விசாரணைகள் முடுக்கி விடப்பட்டன. நண்பர் சந்தேகப் பிராணியானரர்.

மேலதிகாரிகள் நிலைமையை புரிந்துகொண்டனர். ஆனால் என்ன செய்வது? பாதுகாப்புக்கு முன்னெச்சரிக்கை அவசியம் தானே என்று நினைத்தோ என்னவோ அவரை அங்கிருந்து உடனடியாக வெளியேறி விடுமாறு கோரினர்.

அவரும் செய்வதறியாது வெளியே புதிய அனுபவத்துடன் புறபபட்டுச் சென்று விட்டார். என்ஜினியர் அருள் என்றால் என்ன? சாமி என்றால் என்ன தமிழரல்லவா?

இந்த சம்பவம் நடந்த அடுத்த இரண்டாவது நாளே விட்டது தொல்லை என்று கூறியபடி கொழும்பில் நிற்கவே. மனமின்றி நியூசிலாந்து போய் விட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



# அகதிமக்களின் கைவண்ணத் தயாரிப்புகள் சென்னையில் கண்காட்சியும்விற்பனையும்

## ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் நடத்தியது

இலங்கைத் தமிழ் அகதி மக்கள் ஏறத்தாழ 55ஆயிரம் பேர் தற்போது தமிழ்நாட்டில் உள்ள முகாம்களில் வாழ்ந்து வருவது தெரிந்ததே. அவர்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டு அவர்கள் மத்தியில் இயங்கிவரும் தொண்டு நிறுவனங்களில் குறிப்பிடத் தக்கது ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகம் (ofERR) ஆகும்.

அது, இலங்கைத் தமிழ் அகதிமக்களின் சுயதொழில் மேம்பாட்டிற்காகவும், கைத்தொழில்வளர்ச்சிக்காகவும் பல விதமான உதவிகளைச் செய்து வருகின்றது .அந்த உதவிகளைக் கொண்டு அகதிமக்கள் குறிப்பாக அகதித் தாய்மார்களும், பெண்களும்

### சுய தயாரிப்புகள்

ஃ பிறந்த குழந்தைகள் மற்றும் சிறார்களுக்கான சிங்கார ஆடைகள்,

ஃ தனித்துவம் வாய்ந்த நூதனமான வண்ணஓவியங்கள் மற்றும் அலங்காரச் சுவர் மாட்டிகள்,

ஃ வீட்டில் எழில்பெருக்கும் தொங்கவிடத்தக்க அழகிய பூக்கூடைகள் மற்றும் பூவேலைப் பாடுகள்

முதலிய குடும்ப உபயோகப் பொருட்கள் பலவற்றை நவீனமுறையில் செய்து குவித்து உள்ளனர்.

இவற்றின் கண்காட்சியும் விற்பனையும் கடந்த 1995 டிசம்பர் 20, 21, 22 திகதிகளில் சென்னை டவுட்டன் ரிதர்டன் சாலையில் உள்ள ஒய். எம். சி. ஏ. வளாகத்தில் நடைபெற்றன.

### நடிகை ராதிகா

இக்கண்காட்சியினையும் விற்பனையையும் 20. 12. 95 புதன்கிழமை காலை 9. 45 மணியளவில் பிரபல நடிகை ராதிகா தொடங்கி வைத்தார். முதலில் காரில் வந்துஇறங்கிய ராதிகாவை ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகத் தலைவரான திரு. சா. செ. சந்திரகாசன் அவர்களும் மற்றும் நிர்வாகிகளும் மலர்ச்செண்டு வழங்கி வரவேற்றனர். அடுத்து அகதி இசைக்குழுவினர் ராதிகாவை வரவேற்றுப் புனையப்பட்ட பாடலைப் பாடினர். பாடல் முடிந்ததும் பேராசிரியர் திருமதி.உமா டேவிட் உடன் வர, நடிகை ராதிகா குத்து விளக்கேற்றி, நாடாவை கத்தரித்து கண்காட்சியைத் திறந்து வைத்தார். அங்கு குழுமிய மக்களுடன்சென்றுகண்காட்சியின் பல்வேறு பகுதிகளையும் கவனமாகச் சுற்றிப் பார்த்தார்.

சிறுவர்க்கான ஆடைகள், பிறந்த குழந்தைக்கான உடுப்புகள், தவழும் மழலையருக்கான உடைகள் ஆகியவற்றை கவனமாக பார்வையிட்டதுடன் முகாம்களில் எவ்விதவசதியுமற்ற நிலையில் வாழும் அகதிகளான உங்களால் இவ்வளவு சிறந்தமுறையில் எப்படித் தயாரிக்க முடிந்தது என்று அகதிப் பெண்களிடம் தனித் தனியாக விசாரித்தார்.

கண்காட்சியை அவர் பார்வையிட்டு முடிந்ததும், கழகத்தின் தலைவர் முனைவர் அரு.கோபாலன் அவர்கள் கூட்டத்தினருக்கு அவரை அறிமுகப் படுத்தி, அகதி மக்களுக்கு சில ஆறுதல் வார்த்தைகள் கூறும்படி ராதிகாவை கேட்டுக் கொண்டார். அதை ஏற்று ராதிகா பேசியதாவது:

### நல்வாய்ப்பு

நீங்கள் ஈழத்து மக்கள் ஒரு கண்காட்சியை நடத்துகிறீர்கள் என்பதால் தான் உங்களைக் கண்டு உற்சாகப் படுத்த தான் இங்கு வந்தேன். உங்கள் பிரச்சனையில் நான் என்றுமே அக்கறை காட்டி வருபவள் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் பிரச்சனை விரைவில் தீர்வு காணப் பட்டு, இலங்கையில் தமிழ் மக்களை அழிக்கும் யுத்தம் நின்று உண்மையான சமாதானம் ஏற்பட்டு நீங்கள் எல்லாம் நிம்மதியாக உங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பும் சுமுக நிலை ஏற்படவேண்டும் என்று நான் மனதார வேண்டுகின்றேன். அதுவரை உங்களுக்கு இந்த நாட்டில் எந்த வித இடையூறும் இல்லாமல் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். எத்தனையோ தொல்லைகளுக் கிடையிலும் உங்கள் கைத்திறனை வெளிப்படுத்தியுள்ள உங்களை பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். உங்களோடு அளவளாவும் இச்சந்தர்ப்பம் கிடைத்தற்கு நன்றி.

இவ்வாறு நடிகை ராதிகா பேசினார். ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகச் செயலாளர் செல்வி சி. சூரியகுமாரி நன்றி தெரிவித்தார். பின்னர் அகதித் தொண்டர்கள் அனைவருடனும் நின்று படம் எடுத்துக் கொண்டபிறகு 10-15 மணிக்கு நடிகை ராதிகா அங்கிருந்து பிரியா விடை பெற்றுச் சென்றார். இத்தொடக்கவிழா நிகழ்ச்சியில் கழகத்தின் முன்னாள் தலைவர் கோயில் பிள்ளை, ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகச் செயலாளர் சட்டத்தரணிதேவராஜா, இசைப்பேராசிரியர் சிவபாலன், லண்டன் நித்யானந்தன், கழக மருத்துவப் பிரிவுத் தலைவி திருமதி தேவராசா, கண்காட்சி தொடர்பாளர் திருமதி பிலோமினா முதலியோரும் கலந்து கொண்டனர்.

அன்று மாலை நடிகர் மலையூர் மம்பட்டியான் 'புகழ் தியாகராஜன் வருகைதந்தார். இரண்டாம்நாள் பிரபல நடிகர் கார்த்திக்கின் மனைவியும் முன்னாள் நடிகையுமான திருமதி ராகினி கார்த்திக் கண்காட்சி முழுவதையும் பார்வையிட்டு ஒவ்வொருபிரிவு தொண்டரையும் உற்சாகப்படுத்தியதுடன், ரூ3000கு பொருள்கள் கொள்வனவு செய்து ஊக்குவித்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சென்னையில் உள்ள ஐ.நா. உயர்ஆணைய பிரதிநிதிகளும் கண்காட்சியைப் பார்வையிட்டு அகதி மக்களின் சுயதொழில் முயற்சி வெற்றி பெற வாழ்த்திலார்கள்

---

#### கரூர் அகதிமுகாமில் உண்ணாநோன்பு

## மாணவர்கள் பாடசாலை பகிஷ்கரிப்பு

இலங்கைத் தமிழர்களை சிங்கள இராணுவம் பயங்கரமாக படுகொலை செய்து வருவதைக் கண்டித்து கரூர்இராயனூரில் உள்ள இலங்கை தமிழர்கள் ஆண்கள் 410, பெண்கள் 285. ஆண் குழந்தைகள் 130 பேர், பெண குழந்தைகள் 120 பேர். காலை ஆறு மணி தொடங்கி உண்ணாவிரதம் இருந்தனர். இவ் உண்ணாவிரதத்தை முகாம் தலைவர் சிவபெருமான் ஆரம்பித்து வைத்தார். மாலை ஆறுமணிக்கு முகாம் செயலாளர் சுகுமார் முடித்து வைத்தார்.

கரூரை அடுத்து வேலாயுதம் பாளையம் உயர்நிலை பாட சாலையில் கல்வி பயிலும் மாணவ-மாணவியர் 1216 பேர் சிங்கள இராணுவத்தினரின் போக்கை கண்டித்து ஒரு நாள் பாடசாலை செல்லாமல் பகிஷ்கரித்தனர்.

# இந்தியா வழி செய்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலமாகத் தொடர்ந்து ஆக்கிரமிப்புச் செய்து வருவதால், தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்திற்கும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் திரும்ப முடியாமல் தவிக்கின்றனர். அதனால் அவர்களால் எந்தச்சமாதானத் தீர்வையும் முன்வைக்க முடியாதிருக்கின்றது.

இராணுவ ரீதியில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சிறு நம்பிக்கைக்கும் இடமில்லைஎன்பதை இந்தியாவில் உள்ள அனைத்து மக்களும், உலக சமுதாயமும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவகையில் அதிகாரப் பகிர்வின்மூலமே இப்பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணமுடியும்.

## இந்தியாவில் முகாம்களில்

3. தமிழ் நாட்டில் உள்ள 115 முகாம்களில் 56000 இலங்கைத் தமிழ் அகதிகள் இப்போது அரசின் பராமரிப்பில் தங்கியுள்ளனர். இது முற்றிலும் மனிதாபிமானப் பணியாகும். அதேவேளை இந்த அகதி மக்களின் அடிப்படைத் தேவைகளைச் செய்து கொடுப்பதில் கடுமையான சில இடைவெளிகள் தோன்றியுள்ளன என்பதையும் சொல்லியாக வேண்டும். அவையாவன:

அ. தற்காலிக அடிப்படையில் ஐந்தாண்டுகளுக்கு முன்பே இப்போதைய கூடாரங்கள் அமைக்கப்பட்டதனால் அகதி மக்கள் அவற்றைத் திருத்திப் பராமரிக்க வேண்டிய நெருக்கடியில் உள்ளனர். அவற்றில் பல மழை காலத்தில் இற்று விழுந்து விட்டதால் அம்மக்கள் தங்கி வாழ்வது பெரும் பிரச்சினையாக உள்ளது.

### போதாத அகதி உதவு தொகை

ஆ. அகதிகளுக்கான உதவு தொகைகளும் ஐந்தாண்டுகளுக்கு முன்பு கீழ்க் காணுமாறு நிர்ணயிக்கப்பட்டதேஇன்றும் தொடர்கின்றது.

முதல் மூத்த ஆள் (குடும்பத்தலைவர்) ரூ. 150.00 ஒரு மாதத்திற்கு.

மனைவி ரூ. 75.00

மற்றக் குழந்தை ஒன்றுக்கு ரூ. 37.50

1990க்குப் பிறகு வாழ்க்கைச் செலவுபெருமளவுஉயர்ந்துள்ளதால், இந்த உதவு தொகையைக் கூட்டிக் கொடுப்பது மிக அவசரஅவசியமாகும். ஏனெனில் அகதிகள் இதைக் கொண்டு தங்கள் உணவு மற்றும் தேவைகளைச் சமாளிக்க முடியாமல்திண்டாடுகின்றனர்.

### தொண்டு நிறுவனத்தை அனுமதியுங்கள்

இ. தாங்கள் இந்தியாவில் தங்கியிருக்கும்வரை தங்களுக்கு அரசுசாராத்தொண்டு நிறுவனங்களின் சேவை தேவை என அவர்கள் எதிர் பார்க்கின்றனர். ஆனால், எந்தக் காரணமும் காட்டப் படாமல் அது தடை செய்யப் பட்டுள்ளது. அத்தடையை நீக்கி, அரசு தரும் உதவிக்கு மேலதிகமாக தொண்டியக்கங்களின் சேவை தங்களுக்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று அவர்கள் கோருவதை ஏற்க வேண்டும்.

ஈ. உதவு தொகைப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட அகதி மக்கள் முகாம்களை விட்டு வெளியே போய் வேலை செய்து வருவாய் ஈட்டுவது அவசியமாயுள்ளது. ஆனால் அப்படி அவர்கள் வெளியில் போய் வருவது மிகவும் தொல்லைக்குரியதாக்கப்பட்டுள்ளது. அகதிகள் சுதந்திரமாக நடமாடுவதும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இத்தடை அகற்றப்பட வேண்டும். இலங்கை அகதி மாணவர்கள் எந்தக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கும் அனுமதிக்கக் கூடாது என தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது அகதிக் குடும்பங்களின் எதிர் காலத்தையே பாதிக்கக்கூடிய மிகப் பெரிய இடையூறாகும். மிகவும் பாரதூரமான இந்த ஆணையை உடனே விலக்கிக் கொண்டாக வேண்டியது அவசியமாகும்.

### தடையை அகற்றுக

அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் அகதி முகாம்களுக்குள் நுழையவும், அகதி மக்களுக்கு உதவிகள் வழங்கவும் தடை போடப்பட்டுள்ளது. மருத்துவ உதவி, சத்துணவு வழங்கல், ஆற்றுப்படுத்தல் முதலிய பலவிதமான பணிகளை தொண்டு நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டிய அவசியமுள்ள நிலையில் அவற்றுக்குத் தடைவிதித்துவிட்டு, அரசாங்கம் இம்மேலதிகப் பணிகளை எப்படி நிறைவேற்றப் போகிறதென்று தெரியவில்லை.

ஆகவே, அப்பாவி அகதி மக்கள் மீது அன்புகொண்டு, இந்திய அரசாங்கம் இந்த உதவிகளை உடனடியாகச் செய்து கொடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு, அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

---

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, Sait Colony, Ist Street, IIIrd Floor, Egmore, Madras-600008.
Printed at Kuralnery Achagam, Madras-94.

சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை

படிப்பகம்